# 16. சாளுக்கியர்கள்

## வாதாபி அல்லது பாதாமியின் முந்திய மேலைச் சாளுக்கியர்கள் :

சாளுக்கியர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 8-ஆம் நூற்றாண்டு வரையில் தக்காணத்தில் ஆண்டுவந்தனர். மூன்று சாளுக்கிய அரச வமிசங்களும் பல்வேறு காலங்களில் ஆண்டுவந்தனர் பாதாமியில் ஆண்டுவந்த சாளுக்கிய வமிசம் அல்லது முந்திய மேற்கு சாளுக்கியர்கள், கல்யாணியில் ஆண்டுவந்த பிந்திய மேலைச்சாளுக்கியர்கள், வேங்கியைச் சேர்ந்த கிழக்கு சாளுக்கியர்கள் ஆகியோர் அம்மூன்று சாளுக்கிய வம்சங்களை சேர்ந்தவர்களாவர். முந்திய மேற்கு சாளுக்கிய வமிசமே மற்ற சாளுக்கிய வமிசங்களைக் காட்டிலும் மிகவும் பழமை வாய்ந்ததாகும். முந்திய மேற்கு சாளுக்கியர்கள் கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து 8-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரையில் அரசாண்டனர். அதன் பின்னர் மேற்கு சாளுக்கியர்களை வீழ்த்திவிட்டு இராஷ்டிரகூடர்கள் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். கிழக்கு சாளுக்கியர்கள் கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆட்சிபுரிந்தனர்.

பாதாமி சாளுக்கியர்கள் கன்னட நாட்டவர்களென்றும் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர்களென்றும் கருதுகின்றனர். இவர்கள் கூர்ஜராநாட்டை சேர்ந்தவர்கள் என்பதை இப்பொழுது எவரும் ஏற்பதில்லை. உத்தரபதாவில் (Uttarpatha) வாழ்ந்த சூளிகா (Chulika) என்ற இனத்தவர்களின் சந்ததியார்களே சாளுக்கியர்கள் என்று சிலர் கூறியுள்ளனர். சாளுக்கியர்கள் ஒரிஸ்ஸாவில் வாழ்ந்த சுல்க்கிஸ் (Sulkis) என்ற இனத்தவர்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் கூறியுள்ளனர். ஆனால் தற்கால வரலாற்று ஆசிரியர்கள் இக்கருத்துக்களை ஏற்பதில்லை. அவர்கள் கன்னடர்கள் என்பதை மட்டுமே ஏற்கின்றனர்.

பாதாமி சாளுக்கிய அரசர்கள் தங்கள் வம்சத்தின் பெயரை கல்வெட்டுக்களில் சால்கியா, சாலிக்யா, சாளுக்யா என்று பலவிதமாகக் குறிப்பிட்டுள்ளனர். சிலர் சாளுக்கியர்கள் அன்ஹில்வாராவில் ஆண்டுவந்த சோளங்கி (Solanki) என்ற அரச வம்சத்தவர்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கருதுகின்றனர். சாளுக்கிய அரச வமிசத்தவர்கள் சாளுக்கியர்கள் என அழைக்கப்பட்டதற்குக் காரணம் அவர்களின் முன்னோர்களின் ஒருவர் பெயர் சால்கா, (Chalka), சாலிக்கா (Chalika), அல்லது சாளுக்கா (Chaluka) என்றிருந்திருக்க வேண்டுமென கருதுகின்றனர். தக்காணத்தை சேர்ந்த சிலரது பெயர்கள் 'சளுக்கி என முடிகின்றது. உதாரணமாக ஓர் கல்வெட்டில் ஒருவரின் பெயர் ஸ்கந்த சளுக்கி (Skanda chaluki) என குறிப்பிடப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாகிவிட்டக் காரணத்தால், பிற்காலத்திலாண்ட சாளுக்கிய அரசர்களால் தங்கள் வம்சப் பெயர் எவ்வாறு தோன்றியது என்பதை கூற இயலாமல் போய் விட்டது. அதனால் தங்கள் வம்சப் பெயருக்கு வேறுவிதமான விளக்கத்தைத் தரலாயினர். விக்ரமாதித்தர் VI தங்களின் மூதாதையர் பிரம்மன் என்ற கடவுளின் உள்ளங்கையிலிருந்து (Chuluka- உள்ளங்கை) பூதங்களை ஒழித்து பொதுமக்களை காக்கும் பொருட்டு தோன்றியதாகவும் அதனாலேயே தங்களுக்கு சாளுக்கியர் எனப் பெயர் வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாதாமி சாளுக்கிய அரசர்களில் முதல் அரசர்கள் ஜெயசிம்ஹாவும் அவரது மகன் ரணராகாவுமாவர். இவர் 6-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பீஜப்பூர் மாவட்டத்திலுள்ள பாதாமி என்னுமிடத்தில் தங்கள் தலைநகரை நிறுவினர். சில கல்வெட்டுக்களில் ஜெயசிம்ஹாவின் பெயர் ஜயசிம்ஹ வல்லபா எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஜயசிம்ஹாவிற்கு முன்பு பல சாளுக்கிய அரசர்கள் ஆண்டிருத்தல் வேண்டுமெனவும் அவர்களைப்பற்றிய குறிப்புக்கள் கிடைக்காததால் அவர்களைப்பற்றி தெரிந்து கொள்வதற்கு இயலவில்லை

என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஜயசிம்ஹாவின் ஆட்சி குறித்தும் தகுந்த ஆதாரங்கள் கிடைக்காததால் இவரைப் பற்றியும் மிகுதி யாகத் தெரிந்துகொள்ள இயலவில்லை. சாளுக்கியர்கள் சந்திர குலத்தை சேர்ந்தவர்களென்றும், அயோத்தியை தலைநகராகக் கொண்டவர்கள்என்றும் சில கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளன. ஒருவர் பின் ஒருவராக சுமார் 59 சாளுக்கிய அரசர்கள் அயோத்தி யில் ஆண்டனர் என்றும் 16 அரசர்கள் தக்ஷின பதாவில் ஆண்டன ரென்றும், சில காலம்வரை சாளுக்கியர்களின் பெருமை குன்றிய நிலையில் காணப்பட்டதென்றும், அதன் பின்னரே ஜயசிம்ஹா தன் படை வலிமையை பெருக்கி சாளுக்கிய வம்சத்தை புத்துயிர் பெற செய்தார் என்றும் கௌதம் (Kautham) கல்வெட்டில் குறிப்பிடப் பட்டுள்ளது.

## முதலாம் புலிகேசியும், முதலாம் கீர்த்திவர்மனும் :

சுதந்திரமாக ஆளத்துவங்கிய முதல் சாளுக்கிய அரசர் முதலாம் புலிகேசியாவார் (535-66) இவரது பெயர் போலிகேசின் Polikesin) என்றும், புலிகேசின் (Pulikesin) என்றும் பலவிதமாக கல்வெட்டுக் களில் எழுதப்பட்டுள்ளது. புலிகேசின் என்ற சொல்லுக்கு புலிமுடி யோன் (Tiger haired) என்பது பொருள். சாளுக்கிய வம்சத்தை உண்மையிலேயே தோற்றுவித்தவர் இவராகத்தான் இருக்கவேண்டு மென்று கருதுகின்றனர். இவருக்கு சத்தியஸ்ரேயா ரனவிக்ராந்தா, ஸ்ரீ பிரித்திவி வல்லபா போன்ற சில சிறப்புப் பெயர்களும் உண்டு. இவர் ஹிரன்யகார்பா, அஸ்வமேதா, அக்னிஸ்டோமா போன்று பல வேள்விகளை செய்ததாக மங்களேசா தனது கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளார். இவர் புராணங்களில் வரும் கற்பனை கதாநாயகர்களான யாயாதி, திலிபா, ஆகியோர்களைப்போல் பேராற்றல் வாய்ந்தவரென்று கூறப்பட்டுள்ளது. இவர் மனுவின் சட்டங்களையும், புராண இதிகாச நூல்களையும் நன்கு படித்து தேர்ச்சிப் பெற்றிருந்தார் என்று கூறப்பட்டுள்ளது. புலிகேசி பாட்பூரா (Batpura) குடும்பத்தைச் சேர்ந்த துர்லாபதேவி (Durlabhadevi) என்பவளை திருமணம் செய்து கொண்டார். இவர் வாதாபி கோட்டைக்கு அடிக்கல் நாட்டியதாக 543-ல் எழுதப்பட்ட இவரது பாதாமி கல்வெட்டில் குறிப்பிட்டுள்ளார். வாதாபி என்பது ஓர் பூதத்தின் பெயர் என்று கூறப்பட்டுள்ளது. இவர் பாதாமியைத் தலைநகரமாகக் கொண்டு பிஜப்பூர் மாவட்டத்தையும் அதற்கரு கிலுள்ள ஒரு சில இடங்களையும் ஆண்டிருக்க வேண்டுமென கருது கின்றனர்.

இவர் சில அரசர்களை எதிர்த்து வெற்றி பெற்றதே இவர் அஸ்வமேதயாகம்செய்வதற்குக் காரணம்என்று குறிப்பிட்டுள்ளனர். இருப்பினும் இவர் யாரை எதிர்த்து வெற்றி பெற்றார் என்பதுதிட்ட

வட்டமாக அறியப்படவில்லை. புலிகேசி பெற்றதாகக் கூறப்படும் வெற்றிகளில் சிலவற்றை இவரது மகன் கீர்த்திவர்மன் பெற்றிருக்கக் கூடுமென கருதுகின்றனர். சிப்லூன் (Chiplun) என்னுமிடத்திலுள்ள கல்வெட்டொன்றில் வாதாபி கோட்டைக்கு அடிக்கல் நாட்டியவர் கீர்த்திவர்மன் என்று கூறப்பட்டுள்ளது. மகாகூடா தூண் கல் வெட்டில் புலிகேசியும் கீர்த்திவர்மனும் பீஜப்பூர் மாவட்டத்தி லுள்ள முக்தீஸ்வரர் ஆலயத்திற்கு மான்யம் வழங்கியதாகக் கூறப் பட்டுள்ளது.

கீர்த்திவர்மன் | கி.பி. 567-598 வரையில் அரசாண்டார். இவ ருக்கு கீர்த்திராஜா, சத்தியஸ்ரேயா, புருரான பராக்ரமா, வல்லபா, பிருத்வி வல்லபா (Prithivi Vallabha) போன்று வேறு சில சிறப்புப் பெயர்களும் உண்டு. இவர் அழகிய கட்டிடங்களையும், கோயில் களையும் உருவாக்கி தலைநகரத்தை அழகுபடுத்தினார். கீர்த்தி வர்மனின் இளைய சகோதரர் மங்களீசாவும் சில கட்டிடங்களைக் கட்டியதாகக் கூறப்பட்டுள்ளது.

கீர்த்திவர்மன் வங்கா, அங்கா, கலிங்கா, மகதா, கேரளா, கங்கா, பாண்டியா, வைஜயந்தி ஆகிய நாடுகளை வென்றதாக மகா கூடா தூண் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இவை வெறும் புகழ்ச்சி யாக இருக்கக்கூடுமென்றும், கீர்த்திவர்மனால் இத்தனை அரசர்களை யும் தோற்கடித்திருக்க இயலாதென்றும் சிலர் கருதுகின்றனர். கீர்த்திவர்மன் நளாஸ், மௌரியர்கள், கடம்பர்கள் ஆகியோரைத் தோற்கடித்ததுடன் கடம்பர்கள் மேற்கொண்டிருந்த கூட்டிணை வினையும் ஒழித்தார் என்று அய்கோல் கல்வெட்டில் கூறப்பட் டுள்ளது. கடம்பர்கள் வட கன்னட மாவட்டத்தில் ஆட்சி புரிந்தனர். கொங்கணத்தில் மௌரியர்களுக்குச் சொந்தமான இடங்களையும் கீர்த்திவர்மன் கைப்பற்றினார். கீர்த்திவர்மனின் வெற்றிகளினால் சாளுக்கியர்களின் எல்லை பெருமளவிற்கு விரி வாக்கப்பட்டது.

மங்களீசா:

முதலாம் கீர்த்திவர்மன் கி.பி. 598-இல் உயிர் நீத்தார். கீர்த்தி வர்மனின் பிள்ளைகள் அரசுரிமையை ஏற்பதற்குரிய வயதை அடை யாததால், ஆட்சிப்பொறுப்புக்களை அவரது சகோதரர் மங்களீசா கவனித்து வந்தார். இவருக்கு மங்களராஜா, மங்களீஸ்வரா ரணவிக்ராந்தா, உருரணவிக்ராந்தா (Uru-Rana-vikranta) பிருத் விவல்லபா, ஸ்ரீபிருத்திவி வல்லபா, போன்ற சிறப்புப்பெயர்களுண்டு. இவர் விஷ்ணுவிடத்தில் மிகுந்த பக்தி கொண்டிருந்ததால், பரம பாகவதா என்ற சிறப்புப் பெயரும் இவருக்குண்டு. இவர் காளச்சூரி

அரசர்களைத் தோற்கடித்தும், ரெவாடிட்விபா (Revatidvipa)வைக் கைப்பற்றியதுமாகிய செய்திகள் அய்கோல் கல்வெட்டிலும், கௌதம் கல்வெட்டிலும் கூறப்பட்டுள்ளது. மங்களீசா காளச்சூரி அரசரான சங்கரகாணாவின் புதல்வரான புத்தராஜாவை கி. பி 602—ஆம் ஆண்டு ஏப்ரல் 12—ஆம் நாளுக்கு முன்பே தோற்கடித்துவிட்டதாக மகாகூடா தூண் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. கொங்கணத்திலாண்டுவந்த சாளுக்கிய வைஸிராயான சுவாமி ராஜாவை (Swami Raia) மங்களீசா கொன்றுவிட்டதாக நெரூர் (Nerur) கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. சுவாமி ராஜா இரண்டாம் புலிகேசிக்கு ஆதரமாக நடந்துகொண்டதே அவர் மங்களீசாவால் கொல்லப்பட்டதற்குக் காரணம் என்று குறிப்பிட்டுள்ளனர். மங்களீசா தனது உறவினர் இந்திரவர்மன் (Iudravarman Batpuralineage) என்பவரை ரெவாடிட்விபாவின் கவர்னராய் நியமித்தார்.

மங்களீசா ஆட்சியின் இறுதிக் காலத்தில் மங்களீசாவிற்கும் கீர்த்திவர்மனின் மகனான 2—ஆம் புலிகேசிக்குமிடையே பதவிப் போட்டியேற்பட்டது. இதனால் பெரும் உள்நாட்டுப் போரொன்று துவங்கியது. மங்களீசா அரசுரிமையைப் புலிகேசிக்கு அளிக்காமல், தன்னுடைய மகனுக்கு அளிக்க முயற்சித்தமையே இப்போருக்குரிய மிக முக்கிய காரணமாகும். இப்போரில் மங்களீசா கொல்லப்பட்டார். புலிகேசி பாதாமியின் அரசுரிமையையேற்றார்.

## இரண்டாம் புலிகேசி

இரண்டாம் புலிகேசி கி. பி. 611 முதல் 642 வரையில் ஆட்சிப் புரிந்தார். இவருக்கு சத்யஸ்ரேயா (Satyasreya) என்ற மற்றொரு சிறப்புப் பெயருமுண்டு. இவருக்கு வல்லபா, வல்லப ராஜா, வல்லபேந்திரா, பிருத்திவி வல்லபா, ஸ்ரீபிருத்திவி வல்லபா, பரமேஸ்வரா, பரமபாகவதா பரமபட்டாரகா (Parama Bhattaraka) போன்ற சில விருது பெயர்களுமுண்டு.

புலிகேசி ஆட்சியுரிமையை ஏற்றபோது நாடெங்கிலும் குழப்பம் நிலவியது. பகைவர்கள் எல்லையோரங்களில் போர் முழக்கம் செய்த நேரத்தில் சிற்றரசர்களும் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதனால் புலிகேசிக்குப் பல இடையூறுகள் ஏற்பட்டனன. புலிகேசியின் பகைவர்களாகிய ஆப்பாயிகா, கோவிந்தா ஆகியோர் பீஜப்பூர் மீது படையெடுக்கலாயினர். புலிகேசி பேச்சுவார்த்தைகள் மூலம் கோவிந்தாவைத் தன்பக்கம் சேர்த்துக்கொண்டார். அதன் பின்னர் ஆப்பாயிகாவை வெகு எளிதாகத் தோற்கடித்தார்.

உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டியபின் பகையரசர்களை வென்று தன் நாட்டின் எல்லையை விரிவுபடுத்தும் முயற்சியில் புலிகேசி ஈடுபட்டார். புலிகேசியின் வெற்றிச் சிறப்புக்களை ரவிகீர்த்தி என்ற சமண புலவர் அய்ஹோல் கல்வெட்டில் வெகு விளக்கமாக எழுதியுள்ளார். இவர் காளிதாசர், பாரவி (Bharavi) போன்ற பெரும் புலவர்களைப் போல் ஆழ்ந்த புலமையும் மிகுந்த திறமையும் வாய்க்கப்பெற்றவராவார். புலிகேசி கடம்பர்களின் தலைநகரமான வானவாசி (Vanavasi) யைக் கைப்பற்றினார். அதன் பின்னர், தென்மதுரையை ஆண்ட கங்கர்கள், ஹம்சாவை (Humcha) ஆண்ட ஆளுபாஸ் (Alupas) ஆகியோரையும் புலிகேசி தோற்கடித்தார். மேற்கூறப்பட்டவர்கள் கடம்பர்களின் ஆதரவாளர்களாக இருந்ததே புலிகேசி அவர்களைத் தோற்கடித்ததற்கு முக்கிய காரணமாகும். தோல்வியுற்ற கடம்பகுல அரசரான துர்வினிதா கொங்கனிவிருதா (Son of Avinitha Kongani) தன்னுடைய புதல்வியர்களுள் ஒருவரைப் புலிகேசிக்குத் திருமணம் செய்து கொடுத்தார். புலிகேசி கொங்கணத்தில் ஆண்ட மௌரியர்களையும் தோற்கடித்தார். வடபகுதியில் ஆண்டு வந்த லேதர்கள் (Latas), மாளவர்கள் கூர்ஜரர்கள் ஆகியோரையும் தோற்கடித்தார்.

புலிகேசி ஹர்ஷரைத் தோற்கடித்த செய்தியும் அய்ஹோல் கல்வெட்டில் (Aihole (Inscription) கூறப்பட்டுள்ளது. ஹர்ஷர் புலிகேசியால் தோற்கடிக்கப்பட்டதைப் பற்றி ஹியூன்சாங்கும் (Hiuen-Tsang) குறிப்பிட்டுள்ளார். புலிகேசி லேதா (Lata) மாளவம், கூர்ஜரம் ஆகிய இடங்களில் ஆண்ட சிற்றரசர்களின் துணையுடன் ஹர்ஷரைத் தோற்கடித்ததாகக் கருதப்படுகிறது. புலிகேசி ஹர்ஷரை நர்மதை நதிக்கரையில் கி. பி. 612- ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 2-ஆம் நாளன்று தோற்கடித்ததாகக் கணக்கிட்டுள்ளனர். ஹர்ஷரைத் தோற்கடித்தபின் பரமேஸ்வரா (Parameswara) என்ற சிறப்புப் பட்டத்தைப் புலிகேசி சூட்டிக் கொண்டார். புலிகேசியின் ஆட்சிப்பகுதி குஜராத்திலிருந்து தெற்கு மைசூர் வரையிலும் (மஹாராஷ்டிரம், கொங்கனம், கர்நாடகம்) பரவியிருந்தது. புலிகேசி கிழக்குத் தக்காணத்தில் ஆண்டு வந்த கோசலர்களையும், கலிங்க நகரில் ஆண்ட கங்கர்களையும் வெற்றி கண்டார். புலிகேசி கோதாவரி மாவட்டத்திலுள்ள பிஷ்டாபூர் (Pishtsput) என்னுமிடத்தைக் கைப்பற்றி அப்பகுதியை ஆளும் பொறுப்பினை தனது சகோதரர் விஷ்ணுவர்த்தனருக்கு அளித்தார். விஷ்ணுவர்த்தனர் 'கீழைச் சாளுக்கிய வம்சம்' என்ற புதியதொரு சாளுக்கிய வம்சத்தைத் தோற்றுவித்தார். இச்சாளுக்கிய வம்சம் கி. பி. 1070-வரையில் ஆட்சி புரிந்தது. அதன் பின்னர் இச்சாளுக்கிய வம்சம் சோழ அரச வம்சத்தோடு ஒன்றி விட்டது.

புலிகேசி பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனைத் தோற்கடித்தார். ஆனால் மகேந்திரவர்மன் சாளுக்கிய அரசர் புலிகேசியைக் காஞ்சிபுரத்திற்கருகிலுள்ள புள்ளாலூர் (Pullalur) என்னுமிடத்தில் தோற்கடித்ததாக காசக்குடி செப்பேட்டில் (Kasakudi grant) குறிப்பிட்டுள்ளார். புலிகேசி காவேரியைக் கடந்து சோழ, கேரள பாண்டிய அரசர்களுடன் பல்லவ அரசருக்கெதிராக நட்புறவு ஒப்பந்தமொன்று செய்துகொண்டதாகக் கூறப்பட்டுள்ளது. புலிகேசி தனது திக்விஜயத்தை முடித்துக்கொண்டு, தலைநகர் வாதாபிக்குத் (Vatapi) திரும்பினார்.

கி. பி 614 இல் புலிகேசியின் ஆட்சிப் பகுதியான மகாராஷ்டிரத்திற்கு ஹியூன்-சாங் என்ற சீன யாத்திரிகர் வருகை தந்தார். அவர் புலிகேசியின் ஆட்சியைச் சிறப்பித்துக் கூறியுள்ளார். "அரசர் க்ஷத்திரிய வகுப்பைச் சேர்ந்தவர். குடிமக்களனைவரும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அரசருக்கு கட்டுப்பட்டு நடந்தனர். குடிமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசர் பல நன்மை தரும் திட்டங்களை மேற்கொண்டார். இவரது ஆட்சிப் பகுதி 5, 000 லீ (Li) அல்லது 836 சதுர மைல்களைக் கொண்டிருந்தது. தலைநகரத்தின் பரப்பு 5 சதுர மைல்களாகும். நாட்டின் மேற்புறத்தில் ஓடும் ஆறு ஓர் அரணாக அமைந்துள்ளது. நிலங்கள் தொடர்ந்து பயிர் செய்யப்பட்டன. மண் மிகவும் வளப்பமுடையதாக இருந்தது. காலநிலை (Climate) வெப்பமாகக் காணப்பட்டது. பொது மக்கள் உயரமாக இருந்தனர். உறுதியான உள்ளமும், பழிக்குப் பழிவாங்கும் இயல்புமுடையவர்களாய் விளங்கினர். ஆனால், எளிமையும், நேர்மையும் நிறைந்தவர்கள் கல்வி கற்பதில் மிகுந்த ஆர்வமுடையவர்கள். நன்றியுணர்வு நிரம்பியவர்கள். பகைவர்க்குப் பணியாதவர்கள். உதவி நாடிய ஒருவருக்கு உதவியளிக்கும் பொருட்டு, தங்கள் சொந்த நலன்களையும் துறக்க துணிபவர்கள். ஆனால், தங்களை அவமதித்த ஒருவலரைப் பழிக்குப் பழிவாங்க உயிரையும் இழக்கத்துணிந்தவர்கள். பகைவர் ஒருவரை எதிர்த்து சண்டையிட விரும்பினால், இதனை முன்கூட்டியே அறிவிப்பர். பகைவரும் தயாராக ஆயுதங்களுடன் வந்த பின்னரே அவருடன் போரிடுவர். பெரும்பாலும் ஈட்டிகளைக் கொண்டே சண்டையிடுவர். போரில் தோற்று ஓடுபவரைப் பின் தொடர்ந்துக் கைப்பற்றுவர். ஆனால், அப்பகைவர் அடிபணிந்து விட்டால் அவரைக் கொல்லமாட்டார்கள். படைத் தளபதியொருவர் போரில் தோற்றுப்போனால் மன்னர் அவருக்குத் தண்டனையளிப்பதில்லை. ஆனால், பெண்களின் சேலையை அவருக்கு அணிவிப்பார். இதனால் நாணமுற்ற தளபதி உயிர் துறக்கத் துணிந்துவிடுவார். நாட்டில் பல நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்கள் (Champions) இருந்தனர், மல்யுத்த வீரர்

ஒருவர் போட்டியிலீடுபடுவதற்கு முன்பு மது அருந்துவார். அதன் பின்னர் ஈட்டி ஒன்றை மட்டுமே கையிலேந்தி 10,000 பேர்களை எதிர்த்துச் சவால் விடுவார். ஒருவர் மற்றொருவரைப் போட்டியில் தோற்கடித்துக் கொன்றுவிட்டால் அவருக்குத் தண்டனை எதுவும் அளிக்கப்படமாட்டாது. போருக்குச் செல்லும்போது போர்ப் பறையினை முழக்குவர். போர் யானைகளுக்கு மது கொடுப்பர். போர் வீரர்களும் மது அருந்தியே போருக்குப் புறப்படுவர். மருவருந்திய யானைகளும் வீரர்களும் பகைவர்களை மிதித்துக் கொல்வர். அவர்கள் முன் பகைவர்கள் எதிர்த்து நிற்க துணிவின்றி அஞ்சி ஓடுவர். இத்தகைய திறமை படைத்த வீரர்களையும், யானைகளையும் பெற்றிருந்ததால் அரசர் தனது பகைவர்களை மிகவும் அலட்சியமாகக் கருதுவார்.''

பாதாமியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்த சாளுக்கிய அரசர்களில் புலிகேசி மிகவும் சிறப்புமிக்கவராவார். இவரது புகழ் இந்தியாவிற்கப்பாலும் பரவியிருந்தது. பாரசீக அரசர் 2-ஆம் குஸ்ரூவின் (Khusru) அரசவைக்கு கி. பி. 626 இல் சாளுக்கிய அரசர் புலிகேசி தூதுவரொருவரை அனுப்பிவைத்ததாக தபாரி (Tabari) என்ற முகம்மதிய வரலாற்றாசிரியர் குறிப்பிட்டுள்ளார். புலிகேசி பல்லவ மன்னன் மகேந்திரவர்மனைத் தோற்கடித்தார். ஆனால் இவ்வெற்றி தற்காலிகமானதே. ஏனென்றால், மகேந்திர வர்மனின் மகனான நரசிம்மவர்மன் கி.பி. 642இல் புலிகேசியைத் தோற்கடித்து, வாதாபி நகரையழித்து, வாதாபிக் கொண்டா' (Vatapikonda) என்ற சிறப்புப் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். புலிகேசிக்கும் நரசிம்மவர்மனுக்குமிடையே பரியாலா (Pariyala) மணிமங்கலம் (Manimangala), சூரமாரா (Suramara) ஆகிய இடங்களில் போர் நடைபெற்றதென குறிப்பிட்டுள்ளார்.

## முதலாம் விக்ரமாதித்தியர் (கி. பி 655—81)

புலிகேசி உயிர்நீத்தபின் அவரது பிள்ளைகளில் ஒருவரான முதலாம் விக்கிரமாதித்தியர் அரச பதவியேற்றார். புலிகேசியின் பிள்ளைகளுக்கிடையே பதவிப்போட்டியேற்பட்டதால் புலிகேசி உயிர் நீத்து சில ஆண்டுகளுக்குப்பின்னரே விக்கிரமாதித்தியர் அரசுரிமையைக் கைப்பற்றினார். புலிகேசிஉயிர் நீத்ததாலும் அவரது புதல்வர்களிடையே பதவி போட்டியேற்பட்டதாலும் சாளுக்கிய அரசவையில் பெருங்குழப்பம் நிலவியது. இதை வாய்ப்பாகக் கொண்டு பல்லவ மன்னர்கள் சாளுக்கிய ஆட்சிப்பகுதியிலுள்ள சில தென்திசை மாவட்டங்களைக் கைப்பற்றினர். சிற்றரசர்கள் தம் விருப்பம்போல் ஆட்சி செய்யத் துவங்கினர்.

புலிகேசியின் புதல்வர்கள் பகைவர்களை வெளியேற்றும் பொருட்டு சில முயற்சிகளை மேற்கொண்டனர். கி. பி 642 முதல்

655 வரையில் சாளுக்கிய சிம்மாசனம் காலியாய் இருந்ததாகக் கருதப்படுகிறது. விக்கிரமாதித்தியர் சில காலம்வரை தனது மூத்த சகோதரர்களில் ஒருவருக்கு உதவியளித்துவந்தார். ஆனால் சில ஆண்டுகளுக்குப் பின் தனது பாட்டனாரான (Mother's father) துர்வினிதா என்ற கடம்பகுல அரசரின் ஆதரவுடன் ஆட்சியதிகாரத்தைத் தாமே கைப்பற்றிக்கொண்டார். புலிகேசி உயிர் நீத்த பின் அவரது மூத்த மகனான ஆதித்யவர்மன் என்பவர், அரசுரிமையைக் கோரும் பொருட்டு தனது மற்ற சகோதரர்களுடன் போட்டியிட்டதாக கர்னூல் (Karnul) கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. ஆதித்யவர்மனின் மற்ற மூத்த சகோதரர்களான நேடமாரி, சந்த்ராதித்யா போன்றோரும் பதவிப் போட்டியிலீடுபட்டதாகக் கௌதம் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

விக்கிரமாதித்யர் கி.பி. 655-இல் அரசப்பதவியேற்றார் என்று தலமாஞ்சி (Talamanchi) நெரூர் (Nerur) ஆகிய கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது. விக்ரமாதித்யர் புலிகேசியின் செல்லப்பிள்ளையாக விளங்கினார். இவர் சத்யஸ்ரேயா, ரணராஸிகா, அனிவாரிதா (Anivarite), ராஜமல்லா போன்ற சிறப்புப் பெயர்களைப் பெற்றிருந்தார். இவருக்கு ஸ்ரீ பிருத்திவி வல்லபா, மகாராஜாதிராஜா, பரமேஸ்வரா, பரமபட்டாரகா, மகீஸ்வரா (Devout worshipper of Siva) போன்ற வேறு சில பட்டப் பெயர்களுமுண்டு. நாகவர்த்தனர் (Nagavardhana) இவருடைய குருவாவார். பல்லவர்கள் ஆக்கிரமித்திருந்த சாளுக்கிய ஆட்சிப் பகுதியின் தென்பகுதி மாவட்டங்களை இவர்மீட்டார். விக்கிரமாதித்யரின் வெற்றிக்கு அவருடைய குதிரை சித்ரகாந்தா (Chitrakantha) மிகவும் உதவியாக இருந்தது. இவர் தனது பகைவர்களைத் தோற்கடித்து, சாளுக்கிய ஆட்சிப் பகுதிகள் அனைத்தையும் தன்னுடைய கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தார். விக்கிரமாதித்யர் பல்லவ அரசர்களான முதலாம் நரசிம்மவர்மன் அவருடைய மகனான 2-ஆம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேஸ்வரவர்மன் ஆகியோருடன் போரிட்டதாக ஹைதராபாத் கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. விக்கிரமாதித்யர் மகாமல்லர் குடும்பத்தை அழித்தவரென்று கத்வால் செப்பேட்டில் (Gadval plates) கூறப்பட்டுள்ளது. இவர், சோழர்கள் பாண்டியர்கள் கேரளர்கள் (Keralas) ஆகியோரையும் தோற்கடித்ததாகக் கூறியுள்ளார். தென்னிந்தியா முழுவதும் இவரது குடையின் கீழ் கொண்டுவரப்பட்டது. விக்கிரமாதித்யரின் வெற்றிக்கு அவரது மகன் வினயாதித்யர் (Vinayaditya), பேரன் விஜயாதித்யா (Vijayaditya) ஆகியோர் மிகவும் உதவியாக இருந்தனர்.

பல்லவர்களின் கல்வெட்டுக்களில் முதலாம் பரமேஸ்வரவர்மன் முதலாம் விக்கிரமாதித்யரின் படைகளை திருச்சிராப்பள்ளிக் கருகி

லுள்ள பெருவளநல்லூர் (Peruvalanallur) என்னுமிடத்தில் தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. பல இலட்ச வீரர்கள் தனது படையிலிருப்பினும் வெற்றி பெறுவதற்கு வாய்ப்பின்றி சிறியதொரு கந்தல் துணியை இடுப்பில் சுற்றிக்கொண்டு முதலாம் விக்கிரமாதித்யர் போர்க்களத்தினின்றும் தோற்றோடினார் என்று கூறப்பட்டுள்ளது. பல்லவ அரசர் சாளுக்கியர்களின் தலைநகரான பாதாமியையும் அழித்தார். ஆனால் கொன்னூரிலுள்ள (Honnur) சாளுக்கிய அரசர்களின் கல்வெட்டில் சாளுக்கிய அரசர் பல்லவ மன்னரை வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. விக்ரமாதித்யர் கி.பி. 672-ல் காஞ்சிபுரத்திற்கு மேற்புறத்திலுள்ள மல்லியூர் கிராமம் (Malliyur grama) என்னுமிடத்தில் முகாமிட்டிருந்ததாகக் கொன்னூர் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் விக்ரமாதித்யர் கி. பி. 674-இல் சோழ நாட்டின் தலைநகரான உராகபுரம் (Uragapura) — தற்போது திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள உறையூர், வரையில் தனது படைகளை நடத்திச் சென்றார். பல்லவ மன்னர் பாண்டிய மன்னர் கோச்சடையன் (Kochadaiyan) என்பவருடன் கூட்டு சேர்ந்து கொண்டு சாளுக்கிய படைகளுடன் போரிட்டு அதனைத் தோற்கடித்து விரட்டினார். பல்லவ மன்னர் சாளுக்கிய மன்னரைத் திருச்சிராப்பள்ளிக்கருகிலுள்ள பெருவளநல்லூர் என்னுமிடத்தில் தோற்கடித்து விரட்டினார்.

விக்கிரமாதித்தியரின் இளைய சகோதரரான தாராஸ்ரேய ஜெயசிம்மவர்மன் நவசாரி (Navasari) என்னுமிடத்தைத் தலைநகராகக் கொண்டு குஜராத் மாநிலத்தை ஆண்டுவந்தார். இவர் வாலாபியில் ஆண்டுவந்த மெய்த்திரிகா (Maitrika) குடும்பதைச் சேர்ந்த 3-ஆம் சீலாதித்தியாவை (கி. பி. 662—684) (Silaidtya) தோற்கடித்தார். விக்ரமாதித்யருக்கும் பல்லவ மன்னன் 2-ஆம் மகேந்திரவர்மனுக்குமிடையே போர் நடைபெற்றபோது தாராஸ்ரேய ஜெயசிம்மவர்மன் விக்ரமாதித்யருக்கு உதவியளித்தார்.

## வினயாதித்யரும் விஜயாதித்யரும் (Vinayaditya and-Vijayaditya)

முதலாம் விக்ரமாதித்யருக்குப்பின் அவரது மகன் வினயாதித்யர் (கி.பி. 681—696) அரசப் பதவியேற்றார். இவர் தனது தந்தை இறப்பதற்கு (கி.பி. 681) முன்பே அரசுரிமையை ஏற்றதாக கருதப்படுகிறது. இவருக்கு ஸ்ரீபிருத்திவீ வல்லபா, சத்யஸ்ரேயா, ராஜஸ்ரேயா, யுத்தமல்லா போன்ற சிறப்புப் பெயர்களுமுண்டு. இவர் தனது தந்தையுடன் சேர்ந்து பல்லவர்களுக்கெதிராகவும் வேறு சில சிற்றரசர்களுக்கு எதிராகவும் போரிட்டுள்ளார். இவர் பல்லவர்கள் களப்பிரர்கள் (Kalabhras) கேரளர்கள் (Keralas), ஹைஹேயர்கள்

(Hajhayas) காலச்சூரிகள். விளர்கள் (Vilas), மாளவர்கள் (Malawas), சோழர்கள், பாண்டியர்கள் ஆகியோரைத் தோற்கடித்ததாக தனது கல்வெட்டுக்களில் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இவரது வெற்றிச் சிறப்பு மிகைப்படுத்திக் கூறப்பட்டிருக்கலாமென கருதுகின்றனர். வினயாதித்யா, சிங்களவர்கள், பாரசீகர்கள் ஆகியோரைத் தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. அச்சமயம் மேற்கூறிய இருநாடுகளிலும் அரசியல் குழப்பம் காணப்பட்டதாலும், இலங்கையைச் சேர்ந்த இளவரசர் ஒருவரும் பாரசீகத் தலைவர் ஒருவரும் சாளுக்கிய அரசவையில் அடைக்கலம் புகுந்திருந்த காரணத்தாலும், அந்நாடுகளை வினயாதித்யர் வென்றிருக்கக் கூடுமெனக் கருதுகின்றனர். இவர் பல மன்னர்களைத் தோற்கடித்தக் காரணத்தால் பாலித் வாஜா (Palidvaja) என்றழைக்கப்பட்ட சிறப்புக் கொடியினைப் (Banner) பெற்றிருந்தார். இவர் வடஇந்தியாவிலுள்ள சில அரசர்களைத் தோற்கடித்ததாகக் கூறியுள்ளார். இருப்பினும் அவ்வரசர்களின் பெயர்கள் தெளிவாகக் குறிப்பிடப்படாமலிருப்பதால், அவ்வரசர்களை ஓரளவே இவரால் அடக்க முடிந்திருக்க வேண்டுமென்று கருதுகின்றனர்.

வினயாதித்யர் உத்தரபதாவை (Uttarapatha) வெல்லும் பொருட்டு தனது சேனைகளுடன் வடதிசை நோக்கிப் புறப்பட்டார். இவரது மகன் விஜயாதித்யர் வடஇந்திய பகையரசர்கள் சிலரைத் தோற்கடித்து கங்கை, யமுனை அடையாளங்கள் (Ganga. Yamuna Symbols), பாலித்வாஜ ஸ்டான்டர்ட் (The Palidvaja Standard), இரட்டைப் பறவைகள் (Double Drums), மகாசப்த முத்திரைகள் (Mahasabdha Badges), யானைகள், அவர்களுடைய ஆபரணங்கள் பொருட்கள் ஆகியவற்றைக் கைப்பற்றினார். ஆனால், பின்வாங்கிய அவரது பகைவர்கள் விஜயாதித்யாவைக் கைது செய்துவிட்டனர். விஜயாதித்யா சிறையினின்றும் தப்பித்து தன் நாட்டிற்குத் திரும்பினார். தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு தன் நாட்டில் அமைதியையேற்படுத்தினார். இவரது தந்தை வினயாதித்யர் வட இந்தியாவில் சிறையிலடைக்கப்பட்டிருந்த போதே உயிர் நீத்திருக்கவேண்டுமெனக் கருதுகின்றனர்.

லேதா ஆட்சிப்பகுதியில் தாராஸ்ரேய ஜெயசிம்மவர்மன், அவரது மகன் யுவராஜ ஸ்ரேய ஸ்ரேய சீலாதித்யா ஆகியோர் வினயாதித்யாவின் வைஸிராய்களாக ஆட்சி புரிந்தனர். சேந்தரகா (Sendraha) குடும்பத்தைச் சேர்ந்த மகாராஜா பொகில்லி (Maharaja Pogilii) என்பவர் வினயாதித்யாவின் மற்றொரு வைஸிராயாவார். வினயாதித்யாவிற்குப்பின் அவரது மகன் விஜயாதித்யா (VIjayaditya) (கி. பி. 696-733) அரசப்பதவி

யேற்றார். இவருக்கு சத்யஸ்ரேயா, சமாஸ்த புவனேஸ்ரேயா (Samastabhuvanasrya) ஸ்ரீ பிருத்திவிவல்லபா, பரம பட்டாரகா போன்ற சிறப்புப் பெயர்களுண்டு. இவர் பல்லவ அரசர்களுடன் போரிட்டார். விஜயாதித்யா சிவனுக்கு பீஜப்பூர் மாவட்டத்திலுள்ள பட்டாடக்கல் என்னுமிடத்தில் விஜயேஸ்வரா (Vijayesvara now called Sanghamesvara) என்னும் கோயிலைக் கட்டினார். இவர் சமண மதத்திற்கும் ஓரளவு ஆதரவளித்தார். சமண ஆசிரியர்கள் சிலருக்கு மானியமாக பல கிராமங்களை வழங்கினார். இவரது இளைய சகோதரியான குங்கும மகாதேவி (Kunkuma-Mahadevi) லக்ஷ்மெஸ்வர் (Lakshmesvar) என்னுமிடத்தில் அனிஸஜெய பாஸாதி (Anesajeya Basadi) என்றழைக்கப்பட்டதொரு சமணக் கோயிலைக் கட்டினார். விஜயாதித்யாவின் ஆட்சிக்காலத்தில் லேதாவில் ஜேயஸ்ரேய மங்களராஜா (கி. பி 731—732) என்பவர் வைஸிராயாக ஆண்டு வந்தார்.

## இரண்டாம் விக்கிரமாதித்யரும் இரண்டாம் கீர்த்திவர்மனும் :

விஜயாதித்யாவிற்குப்பின் அவரது மகன் 2-ஆம் விக்கிரமாதித்யர் அரச பதவி யேற்றார். இவர். கி. பி 734 முதல் 745 வரை ஆட்சி செலுத்தினர். இவருக்கு சத்யஸ்ரேயா, ஸ்ரீபிருத்திவி வல்லபா போன்ற சிறப்புப் பெயர்களுண்டு. பீமா என்பவர் இவரது இளைய சகோதரராவார். பீமா பிந்திய மேலைச் சாளுக்கியர் (Later western Chalukyas) என்ற புதியதொரு சாளுக்கிய அரச வமிசத்தைத் தோற்றுவித்தவராவார். காலச்சூரி குடும்பத்தைச் சேர்ந்த இளவரசி லோகமகாதேவி என்பவர் விக்கிரமாதித்யரின் தலைமை ராணியாவார். லோக மகாதேவி பட்டாடக்கல்லில் சிவனுக்கு லோகீஸ்வரா (Now Called Virupaksha) என்னும் கோயிலைக் கட்டியுள்ளார். குந்தா (Gunda) என்ற புகழ்மிக்க சிற்பி இக் கோயிலின் கட்டுமான பணிகளைக் கண்காணித்து வந்தார். லோகமகா தேவியின் ' உடன் பிறந்த இளைய சகோதரியான (Couterine younger sister of Lohamahadevi) ராஜ்னி திரிலோக்கிய மகாதேவி (Rajni Trilokyamahadevi) விக்கிரமாத்தியரின் இரண்டாவது மனைவியாவார். ராஜ்னி லோகீஸ்வரா ஆலயத்திற் கருகாமையில் சிவனுக்கு திரிலோக்யேஸ்வரா (Trilokyesvara) என்னும் பெயருடையதொரு கோயிலைக் கட்டியுள்ளார்.

விக்கிரமாதித்தியர் பல்லவ அரசருக்கெதிராகப் போரிட்டார். விக்கிரமாதித்யர் பல்லவமன்னரான 2-ஆம் நந்திவர்ம பல்லவமல்லா (Nandivarma pallava malla) வைத் தோற்கடித்து அவருக்குச் சொந்தமான கடுமுகா, சமுத்திரகோஷா (Samudragosha) போன்ற

இசைக் கருவிகள், யானைகள் வைரங்கள் ஆகியவற்றைக் கைப்பற்றினார். விக்கிரமாதித்யர் படையெடுத்து காஞ்சி நகருக்குள் புகுந்தார். ஆனால் காஞ்சி நகருக்குச் சேதம் ஏதுமேற்படுத்தவில்லை. அதற்கு மாறாக அந்நகரிலுள்ள ராஜசிம்மேஸ்வரா (Rajasimhesvar) என்ற கோயிலுக்குத் தங்க கட்டிகளைத் தானமாக வழங்கினார். இக்கோயில் 2-ஆம் நரசிம்மவர்மன் காலத்தில் கட்டப்பட்டதாகும். விக்கிரமாதித்தியர் சோழர்கள், கேரளர்கள், களப்பிரர்கள் ஆகியோரைவென்று இந்து மகா சமுத்திரத்தின் கரையோரத்தில் வெற்றி தூண் (Pillar of Victory) ஒன்றை நட்டுவித்தார். விக்கிரமாதித்யரின் மகனான இளவரசர் 2-ஆம் கீர்த்திவர்மனும் இப்படையெடுப்புக்களை மேற்கொள்வதற்கு மிகவும் உதவியாக இருந்தார். சில ஆண்டுகளுக்குப்பின்னர் சாளுக்கியர்களின் வலிமை குன்றத் துவங்கியது. இதனால் எட்டாம் நூற்றாண்டில் முற்பகுதியில் தக்காணத்தின் வடபகுதியில் இரு இராஷ்டிரகூட அரச குடும்பங்கள் வளர்ச்சிபெற துவங்கின.

விக்கிரமாதித்யரின் ஆட்சிக் காலத்தில் அரேபியர்கள் இந்தியாவின் மீது படையெடுத்தனர். ஆனால் அப்படையெடுப்பினை ஜெயஸ்ரேய மங்கள ராஜாவின் இளைய சகோதரரான அவனி ஜனஸ்ரேய புலிகேசி என்பவர் முறியடித்தார். இவர் இந்தியாவின் வட பகுதியிலுள்ள லேதாவில் விக்கிரமாதித்யரின் வைஸிராயாக ஆட்சி புரிந்து வந்தார். இவரது வெற்றியைப் பாராட்டும் பொருட்டு இவருக்கு தக்ஷினபதா ஸ்வதர்னா (Dakshinapatha svadharna), அனிவர்தகா போன்ற சிறப்பு விருதுகளை விக்ரமாதித்யர் வழங்கினார். ஆனால் சில ஆண்டுகளுக்குப்பின் இராஷ்டிரகூட அரசர் தந்திதுர்கா சாளுக்கிய வைஸிராயிடமிருந்து லேதா ஆட்சிப்பகுதியை கைப்பற்றிவிட்டார். விக்கிரமாதித்யருக்குப்பின் அவரது மகன் 2-ஆம் கீர்த்திவர்மன் (Kirtivarman II) (கி.பி. 745—757) அரசப் பதவியேற்றார். இவருக்கு சத்யஸ்ரேயா, நிருபசிம்கா (Nirupasimha), வல்லபா போன்ற சிறப்புப் பெயர்களுமுண்டு. கீர்த்திவர்மன் துங்கபத்ராவிலுள்ள பரமேஸ்வரா என்ற சிவன் கோவிலுக்கு மானியம் வழங்கினார்.

### பாதாமி சாளுக்கியர்களின் வீழ்ச்சி :
### (The end of the Chalukya Kingdom of Badami)

எட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், 2-ம் கீர்த்திவர்மனின் ஆட்சியின்போது சாளுக்கியர்களின் ஆட்சி வீழ்ச்சியுற துவங்கியது. இராஷ்டிரகூட அரசர் தந்திதுர்கா(2-ஆம் தந்திவர்மன்) சாளுக்கியர்யர்களின் ஆட்சிப் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டார். இவர் சாளுக்கியர்களின்கீழ் சிற்றரசராய் ஆட்சிபுரிந்தவராவார். கீர்த்திவர்மனைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றியதாக கி. பி.

754-ல் எழுதப்பெற்ற சாமங்காடு கல்வெட்டில் தந்திதுர்கா குறிப்பிட்டுள்ளார். மகாராஜாதிராஜா, பரமேஸ்வரா, பரமபட்டா ரகா போன்ற சிறப்புப் பட்டங்களைத் தந்திதுர்கா சூட்டிக்கொண் டார். தந்திதுர்கா உயிர்நீத்தபின், தனது ஆட்சிப் பகுதியை மீட்கும் பொருட்டு கீர்த்திவர்மன் படையெடுத்தார். ஆனால் தந்திதுர்கா விற்குப்பின் பதவியேற்ற முதலாம் கிருஷ்ணா அப்படையெடுப் பினை முறியடித்தார். முதலாம் விக்ரமாதித்யரின் ஆட்சிக் காலத்தின்போது சாளுக்கியர்களின் ஆட்சிப்பகுதி வடக்கே குஜராத்திலிருந்து தெற்கே நெல்லூர் மாவட்டம் வரையிலும் பரவியிருந்தது. ஆனால், பல்லவர்களுடன் மேற்கொண்ட போரால் வட இந்தியாவிலுள்ள தங்கள் ஆட்சிப் பகுதிகளின்மீது சாளுக்கிய அரசர்கள் மிகுந்த கவனத்தைச் செலுத்த இயலவில்லை. அதனால் வைஸிராய்களாக ஆண்டுவந்தவர்கள் சுதந்திர அரசர்களாக மாறத்துவங்கினர். இதனால் பாதாமி சாளுக்கிய அரசர்களின் ஆட்சி வீழ்ச்சியுறத் தொடங்கியது.

### 3. கல்யாணியின் பிந்திய மேலைச்சாளுக்கியர்கள்

தைலா II (Taila II) என்பவரே பிந்திய மேலைச் சாளுக்கிய வமிசத்தைத் தோற்றுவித்தவராவார். இவர் கி.பி. 973—997 வரையில் ஆட்சி செலுத்தினார். முந்திய மேலைச் சாளுக்கியர்கள் இழந்த பல இடங்களை இவர் மீட்டார். இவர் ஒரிஸ்ஸா, நேப்பாளம், குன்ட்டாலா ஆகிய இடங்களை வென்றார். இவர் மாளவநாட்டைச் சேர்ந்த பரமார அரசர் மூஞ்சாவைத் தோற் கடித்தார். இவர் மகாராஜா, சக்ரவர்த்தி பரமேஸ்வரா போன்ற சிறப்புப் பட்டங்களை சூட்டிக் கொண்டார்.

தைலாவிற்குப்பின் அவரது மகன் சத்யஸ்ரேயா என்பவர் பதவி யேற்றார். இவருக்கு கொள்ளிகா என்ற மற்றொரு பெயருமுண்டு. இவர் சோழ மன்னரை வென்று அவரது ஆட்சிப் பகுதியை சூறை யாடியதாகக் கூறியுள்ளார். சத்யஸ்ரேயாவுக்குப்பின் தாஸவர்மன், விக்கிரமாதித்யா V, ஜயசிம்மா I ஜகதேகமல்லா, போன்றோர் ஆட்சி புரிந்தனர். ஜகதேகமல்லா மாளவத்தின் மன்னர் போஜா என்பவரைத் தோற்கடித்தார். இனி சோழ அரசர் இராஜேந் திராவை வென்றதாகக் கூறியுள்ளார். இருப்பினும் சோழர்களின் கல்வெட்டுக்களில் இச்செய்தி மறுக்கப்பட்டுள்ளது.

ஜகதேகமல்லாவிற்குப் பின் சோமேஸ்வரர் I கி. பி. 1042-இல் பதவியேற்றார். இவர் மான்யகேட்டாவிற்குப் பதிலாக கல்யாணி என்னுமிடத்தைத் தனது தலைநகரமாகக் கொண்டார். இவரது ஆட்சிக் காலத்தின்போதும் சோழர்களுடன் தொடர்ந்து போர் நடைபெற்றது. இவர் இராஜேந்திராவை போரில் கொன்றதாக தன்னுடைய கல்வெட்டில் கூறியுள்ளார். ஆனால் சோழர்களின் கல்வெட்டில் சோமேஸ்வராவை கி. பி. 1053-இல் கொப்பம் என்ற

மிடத்தில் இராஜேந்திரா தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. சாளுக்கியப்படைகள் பரமாரர்களின் தலைநகரமான தாராவை அழித்ததாகவும், காஞ்சிபுரம் வரையில் சாளுக்கியப் படைகள் முன் னேறிச் சென்றதாகவும் பில்ஹனா என்பவர் கூறியுள்ளார். இருப் பினும் சோழர்களின் கல்வெட்டுக்களில் சோழ அரசர் இரண்டாம் இராஜேந்திராவிடத்திலும் சோமேஸ்வரர் இரண்டாம் முறையாக தோல்வியடைந்துவிட்டதாகக் கூறப்பட்டுள்ளது. சோமேஸ்வரர் கோசலை, கலிங்கா ஆகிய இடங்களையும் ஆட்சிபுரிந்தார்.

சோமேஸ்வரர் தன்னுடைய இரண்டாவது மகன் விக்கிர மாதித்யரை அரசராக்க விரும்பினார். ஆனால் விக்கிரமாதித்தர் தன்னுடைய மூத்த சகோதரர் சோமேஸ்வரர் II என்பவரையே அரசுரிமையை ஏற்கும்படி கேட்டுக்கொண்டார். சோமேஸ்வரர் II அரசுரிமையை ஏற்றார். விக்கிரமாதித்தியர் அவருடைய படைத் தளபதியாய் பணியாற்றினார். விக்கிரமாதித்தர் கங்கைகொண்ட சோழபுரம் வெங்கி, பரமார்களின் கோட்டையான சக்ரவோத்திரா ஆகியவற்றை வென்றதாகக் கூறப்பட்டுள்ளது. விக்கிரமாதித் யாவின் தந்தை நோயின் உபாதையால் துங்கபத்ரா நதியில் மூழ்கி உயிர் துறந்தார். (1068) அதன் பின்னர் சோமேஸ்வரர் II சுதந்திர மாக ஆளத்துவங்கினார். இவர் தீய நடத்தையுடையவராய் மாறி னார். விக்கிரமாதித்யர் பிந்திய மேலைச் சாளுக்கியர்களின் ஆட்சிப் பகுதியின் தென்பகுதியை சுதந்திரமாக ஆளத்துவங்கினார். விக்கிர மாதித்தர் கொங்கணத்தின் அரசர் ஜயகேசின் என்பவரைத் தோற் கடித்தார். சோழ அரசர் வீர இராஜேந்திரா, தனது மகளை விக்கிர மாதித்தருக்கு திருமணம் செய்து கொடுத்ததாகக் கூறப்பட்டுள்ளது. விக்கிரமாதித்தர் தன்னுடைய சகோதரர் சோமேஸ்வராவை பதவி யினின்றும் அகற்றி தானே பேரரசராக ஆளத்துவங்கினார். இவர் தனது பெயரை ஆறாம் விக்கிரமாதித்தர் என்று மாற்றிக்கொண் டார். (கி. பி. 1076) விக்கிரமாதித்தர் VI சுமார் 50 ஆண்டுகள் வரை ஆட்சிபுரிந்தார். இவரது சகோதரரும் பானவாசியின் கவர்னருமான ஜயசிம்மா கி. பி. 1083-இல் கிளர்ச்சியிலீடுபட்டார். பில்ஹனா என்ற எழுத்தாளர் இவரது அரசவையிலிருந்து வந்தார்.

விக்கிரமாதித்தருக்குப் பின் அவரது மகன் சோமேஸ்வரர் III பதவியேற்றார். இவர் போரிடுவதைக் காட்டிலும் இலக்கியத் திலேயே மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இவரிடம் சிற்றரசராக ஆண்டு வந்த விஷ்ணுவர்தனா சுதந்திரமாக ஆளத்துவங்கினார். சோமேஸ்வரா III-க்குப் பின் ஜகதேகமல்லா II பதவியேற்றார். இவர் கி.பி. 1135-1151 வரை ஆட்சி புரிந்தார். இவரது ஆட்சியின் போது ஹொய்சாலர்கள் தொல்லை கொடுக்கத்துவங்கினர்.

ஜகதேகமல்லா IIக்குப் பின் தைலா III பதவியேற்றார். இவர் 1151—116ச் வரையில் ஆட்சி புரிந்தார். இவர் காஹத்திய அரசர் புரோலா II-ஆல் தோற்கடிக்கப்பட்டார். ஹோய்சாலர்களும், யாதவ அரசர்களும் சாளுக்கியர்களின் ஆட்சிப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டனர். பிந்திய மேலைச் சாளுக்கியர்களின் ஆட்சிக் கி. பி. 1190-இல் முடிவுற்றது.

## 4. வேங்கியின் கீழைச் சாளுக்கியர்கள்

இரண்டாம் புலிகேசியின் சகோதரரான விஷ்ணுவர்தனா என்பவரே கீழைச் சாளுக்கிய வம்சத்தை தோற்றுவித்தவராவார். கி. பி. 613-இல் விசாகப்பட்டினம், நெல்லூர் ஆகிய மாவட்டங்களின் வைசிராயாக நியமிக்கப்பட்டிருந்தார். இவர் பின்னர் ஆந்திராவிலுள்ள வெங்கி என்னுமிடத்தை தலைநகரமாகக் கொண்டு சுதந்திரமாக ஆளத்தொடங்கினார். இவர் கி. பி. 615—633 வரையில் ஆட்சி புரிந்தார்.

விஷ்ணுவர்தனாவிற்குப் பின் அவரது மகன் ஜயசிம்மா I பதவியேற்றார். அவர் 633—663 வரையில் ஆட்சிபுரிந்தார். இவரது பதவிக்காலத்தில்தான் பல்லவ மன்னரிடம் இரண்டாம் புலிகேசி தோல்வியுற்றார். ஜயசிம்மா புலிகேசிக்கு உதவியளித்ததாகக் கூறப்படவில்லை. ஜயசிம்மாவிற்குப் பின் இவரது சகோதரர் இந்திர வர்மன் 663-இல் பதவியேற்றார். இவரை இந்திரராஜா, இந்திர பட்டாரகா என்றும் அழைப்பதுண்டு. இவர் ஒரு வாரம் மட்டுமே ஆட்சி புரிந்தார். இவருக்குப்பின் இவரது மகன் விஷ்ணுவர்தனா II பதவியேற்றார். இவர் 663—672 வரையில் ஆட்சிபுரிந்தார். இவருக்குப்பின் இவரது மகன் மங்கியுவராஜா என்பவர் பதவியேற்றார். இவர் 672—696 வரையில் ஆட்சிபுரிந்தார்.

மங்கியுவராஜாவிற்குப்பின் ஜயசிம்மா II பதவியேற்றார். இவர் 696-709 வரையில் ஆட்சி புரிந்தார். ஜயசிம்மா உயிர்த்தபின் கொக்குளி விக்கிரமாதித்தர் என்பவர் பதவியேற்றார். இவர் 6 மாதங்கள் மட்டுமே ஆட்சி புரிந்தார். இவர் கலிங்கத்தைக் கைப்பற்றினார். இவருக்குப்பின் இவரது மூத்த சகோதரர் விஷ்ணுவர்தனா III பதவியேற்றார். இவர் 709—764 வரையில் ஆட்சி புரிந்தார். இவரது தளபதி உதயசந்திரா நிஷத நாட்டரசரைத்தோற்கடித்தார். விஷ்ணுவர்தனாவிற்குப்பின் அவரது மகன் விஜயாதித்தியா I பதவியேற்றார். இவர் 746—764 வரையில் ஆட்சிபுரிந்தார். இவரது பதவிக்காலத்தின்போதுதான் பாதாமியின் மேற்கு சாளுக்கியர்கள் இராஷ்டிரகூடர்களிடம் தோல்வியுற்றனர்.

விஜயாதித்தியாவிற்குப்பின் விஜயாதித்தியா II பதவியேற்றார். இவர் 799—843 வரையில் ஆட்சி புரிந்தார். இவரை கங்கர்கள்

இராஷ்டிரகூடர்கள் ஆகியோர் தாக்கினர். இவர் ஷாம்பு என்ற கடவுளுக்குப் பல கோயில்களைக் கட்டியுள்ளார். இவருக்குப்பின் விஜயாதித்தியா III பதவியேற்றார். இவர் கி.பி. 844—888 வரையில் ஆட்சிபுரிந்தார். இவர் இராஷ்டிரகூட அரசர் கிருஷ்ணா IIஐ தோற்கடித்தார். இவர் கங்கர்களையும் தோற்கடித்தார். இவர் மங்கி (Mongi) என்ற பெயருடைய ஓர் சோழ அரசரால் கொல்லப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. இவருக்குப்பின் பீமா, அம்மா விஷ்னுவர்தனா VI, பீமா III, விஜயாதித்தியா VI சக்திவர்மன், விஷ்னுவர்தனா VIII, குலோத்துங்கா போன்றோர், ஆட்சிபுரிந்தனர். குலோத்துங்கா 1063—1118 வரையில் ஆட்சிபுரிந்தார். இவர் சோழராட்சிப் பகுதிகளை ஆளத்துவங்கினார். விஜயாதித்தியா VII இவரது பிரதிநிதியாக வேங்கியில் ஆண்டு வந்தார்.

## சாளுக்கியர்களின் ஆட்சியின்போது தக்காணத்தின் நிலைமை :

சாளுக்கியர்களின் ஆட்சியின்போது கலைத்துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. குறிப்பாகக் கட்டிடக்கலை பெருவளர்ச்சியுற்றது, எண்ணற்ற கோயில்கள் கட்டப்பட்டன. அய்ஹோல் என்னுமிடத்தில் மட்டும் 70 கோயில்கள் கட்டப்பட்டன. பாதாமி, பட்டாடக்கல் ஆகிய இடங்களிலும் எண்ணற்ற கோயில்களைக் கட்டியுள்ளார்கள். சாளுக்கியர்கள் குப்தர்களின் கட்டிடக்கலையைப் போல் அல்லாமல் சிறிது வேறுபட்ட புதியதோர் கட்டிடக் கலையினை உருவாக்கினர். இவர்கள் இந்துக் கடவுள்களுக்குப் பல குகைக் கோயில்களைக் கட்டினர். பாறைகளைக் குடைந்து கோயில்களை உருவாக்கும் 'முறை கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் தான் பெரும் முன்னேற்றம் அடைந்தது. பாறைகளைப் பயன்படுத்தாமல் கற்களை அடுக்கியும் பல கோயில்களை உருவாக்கியுள்ளனர்.

சாளுக்கியர்கள் இந்து சமயத்தை பெரிதும் ஆதரித்தனர். இருப்பினும் அவர்கள் மற்ற சமயங்களுக்கும் ஆதரவளித்தனர். அய்ஹோல் கல்வெட்டை எழுதிய ரவிகீர்த்தி ஓர் சமணராவர். சாளுக்கியர்கள் காலத்தில் சமண சமயம் ஓரளவு முன்னேற்றம் அடைந்தது. சாளுக்கியர்கள் காலத்தில் பௌத்த சமயம் வீழ்ச்சியுறத் துவங்கிற்று. இருப்பினும் ஹியூன்சாங் பல பௌத்த மடங்களைக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். சாளுக்கியர்கள் வேள்விகள் செய்வதில் பெருவிருப்பம் கொண்டிருந்தனர்.

# 17.இராஷ்டிரகூடர்கள்

இராஷ்டிரக்கூடர்களின் பூர்வீகம் குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. இராஷ்டிரகூடர்கள் வட இந்தியாவில் வாழ்ந்த ரேதர்களின் (Rathors) வழித்தோன்றல்கள் என டாக்டர் ஃப்ளீட் (Dr. Fleet) குறிப்பிட்டுள்ளார். பர்னெல் (Burnell) இராஷ்டிர கூடர்கள் ஆந்திராவிலுள்ள ரெட்டியார் (Reddis) வகுப்பைச் சேர்ந்தவர்களென குறிப்பிட்டுள்ளார். மால்கெட்டை (Malkhed)ச் சேர்ந்த இராஷ்டிரகூடர்கள் ராஸ்டிரிகர்கள் அல்லது ராதிகர்கள் (Rastikas or Rathikas) வகுப்பைச் சேர்ந்தவர்களென்று சிலர் குறிப்பிட்டுள்ளனர். ஏனென்றால் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்கள் கி. பி. 3-ஆம் நூற்றாண்டில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர் களாய் விளங்கினர். இராஷ்டிரகூடர் என்ற இவ்வமிச பெயர் ஒரு பதவியின் பெயரிலிருந்து தோன்றியிருக்கக்கூடுமென சிலர் கருதுகின்றனர். ஏனென்றால், இராஷ்டிரகூடர் என்ற அதிகாரிகள் ஒரு ராஷ்டிரா (அல்லது மாவட்டத்தின்)வின் ஆட்சி தலைவர் களாய் பணியாற்றினர் கி. பி. 9—ஆம் நூற்றாண்டில் ஆண்ட இராஷ்டிரகூட அரசர்கள், தாங்கள் மகாபாரத காலத்தில் வாழ்ந்த யாது குடும்பத்தின் (Yadu family) வழித்தோன்றல்கள் என குறிப்பிட்டுள்ளனர். சிலர் இராஷ்டிரகூடர்கள் யாது குடும்பத்தின் ஒரு பிரிவாகிய ரட்டாஸ் (Rattas) என்ற பிரிவைச் சேர்ந்தவர்களென்று கூறியுள்ளனர்.

டாக்டர் அல்டீகர் (Dr. Altekar) இராஷ்டிரகூடர்கள் கர்நாடகத்தைச் சேர்ந்தவர்களென்றும் கன்னடம் அவர்களது தாய்மொழி என்றும் குறிப்பிட்டுள்ளார். பல இராஷ்டிரகூட வமிசங்கள் இந்தியாவின் பல பகுதிகளில் பல்வேறு காலங்களில் ஆட்சிப் புரிந்துள்ளன. கோவிந்தராஜா என்ற இராஷ்டிரகூட அரசர் சாதரா ரத்னகிரி பகுதியில் ஆண்டுவந்தார். மற்றொரு இராஷ்டிரகூட வமிசம் மத்திய பிரதேசத்திலுள்ள பேட்டுல் (Betul), எலிச்பூர் (Ellichpur) மாவட்டங்களில் கி. பி. 7. 8-ஆம் நூற்றாண்டுகளில் ஆட்சி புரிந்தனர். தந்திவர்மன், முதலாம் இந்திரா, முதலாம் கோவிந்தர், முதலாம் கர்க்கா (Karka I) போன்றோர் இராஷ்டிரகூட அரசர்களின் மூதாதையர்களாவர். இவர்கள் எப்பகுதியிலாண்டு வந்தார்கள் என்பது தெளிவாக அறியப்படவில்லை. இருப்பினும் இவர்கள் பேராருக்கருகில் (Berar) ஆண்டிருக்கலாம் என்று டாக்டர் அல்டிகர் குறிப்பிட்டுள்வார்.

### தந்திதுர்கா (Dantidurgs) :

மான்யகேட்டாவில் (Manyakheta) ஆண்டுவந்த இராஷ்டிரகூட அரச வமிசம், அவ்வமிசத்தைச் சேர்ந்த தந்தி துர்காவின் ஆட்சிக் காலத்தில் சிறப்படையத் துவங்கிற்று. தந்திதுர்கா பல இடங்களைக் கைப்பற்றியதாக அவரது கல்வெட்டுக்களில் கூறப்பட்டுள்ளது. இவர்

மாஹி, மகாநதி, ரேவா ஆகிய நதிகளின் கரையோரங்களில் போரிட்டதாகவும்; காஞ்சி, கலிங்கம், கோசலம், ஸ்ரீசைலம், மாளவம் லேதா, (Lata), தங்கா (Tanka) ஆகிய இடங்களை கைப்பற்றியதாகவும் கூறப்பட்டுள்ளது. இவர் தனது வெற்றிச் சிறப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் உஜ்ஜயினியில் ஹிரன்ய ஹார்பா (Hiranya (gharba) என்ற வேள்வியினை செய்தார். அவ்விழாவின் போது கூர்ஜாரநாட்டு அரசரே வாயிற்காப்போராக நிறுத்தப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது. தந்தி துர்க்கா சாளுக்கிய அரசரைத் தோற்கடித்தார். அத்துடன் இமயம் முதல் சேது வரையிலுமுள்ள பல அரசர்களை வென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் இவர் எந்தெந்த அரசரைத் தோற்கடித்தார் என்பதை வரிசைப் படுத்திக் கூறுவதற்கு இயலவில்லை. தந்தி துர்க்கா பெற்ற தாகக் கூறப்படும் வெற்றிகளில் சிலவற்றை அவர் சாளுக்கியர்களின் கீழ் சிற்றரசராக ஆண்டு வந்த போதே பெற்றிருக்க வேண்டுமென சிலர் கருதுகின்றனர். அரேபியர்களின் படையெடுப்பினை முறியடிக்கும் பொருட்டு சாளுக்கிய அரசர் 2-ஆம் விக்ரமாதித்யர் பேராடியபோது, தந்தி துர்க்காவும் போரில் கலந்துகொண்டு போதிய ஒத்துழைப்பினை நல்கினார். கி. பி. 738-இல் அரேபியர் களுக்கெதிராக நடைபெற்ற போரில், அரேபியர்கள் தோற்கடிக்கப் பெற்று விரட்டப்பட்டனர். அவர்கள் மீண்டும் குஜராத்தின் மீது போர் தொடுக்காவண்ணம் கடுமையாகத் தாக்கப்பட்டனர். தந்தி துர்க்கா இப்போரில் திறமையாகப் போரிட்டதால் அவரைக் கௌரவிக்கும் பொருட்டு பிருத்வி வல்லபா, கத்கவலோகா Khadgava-loka) போன்ற சிறப்புப் பட்டங்களை 2-ஆம் விக்கிரமாதித்யர் அளித்தார். 2-ஆம் விக்கிரமாதித்யர் பல்லவ மன்னருக் கெதிராக கி. பி. 743-இல் மேற்கொண்ட போரிலும் தந்தி துர்கா கலந்து கொண்டார்.

2-ஆம் விக்கிரமாதித்யர் கி. பி 747-இல் உயிர் நீத்தார். இதை வாய்ப்பாகக் கொண்டு தந்தி துர்க்கா தன் நிலையை வலுப்படுத்திக் கொள்ள விரும்பினார். அதன் பொருட்டு பல படையெடுப்புக்களை மேற்கொண்டு பல இடங்களைக் கைப்பற்றினார். தந்தி துர்க்கா கூர்ஜரம், மாளவம் ஆகிய இடங்களிலாண்ட அரசர்களைத் தோற்கடித்தார். அதன் பின்னர் கிழக்கு மத்திய பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். கி. பி. 750 இல் தந்தி துர்கா மிகவும் வலிமை பொருந்திய மன்னராய் மாறினார். தந்திதுர்கா வலிமை பொருந்தியவராய் மாறுவதைக் கண்ட 2-ஆம் கீர்த்திவர்மன் அவரை அடக்கவேண்டுமென்று தீர்மானித்தார். அதனால் இவர்களுக்கிடையே காந்தேஷ் என்னுமிடத்தில் கடும்போர் நடைபெற்றது. தந்திதுர்க்கா போரில் வெற்றி பெற்றார்.

கி. பி 753ற்குள் மகாராஷ்டிரம் முழுவதையும் கைப்பற்றிவிட்டார். அதனால் தந்திதுர்க்கா மகாராஜா, பரமேஸ்வரா போன்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக் கொண்டார். தந்திதுர்கா கி. பி 758 இல் உயிர் நீத்தார். இவருக்குப்பின் இவரது சிறிய தந்தையாரான (Uncle) முதலாம் கிருஷ்ணா I அரசப் பதவியேற்றார்.

## முதலாம் கிருஷ்ணா (கி. பி. 758—773) :

தந்திதுர்க்கா சாளுக்கிய அரசர் கீர்த்திவர்மனைத் தோற்கடித்த போதும், கீர்த்திவர்மன் முற்றிலுமாக அடக்கப்படவில்லை. கீர்த்தி வர்மன் முதலாம் கிருஷ்ணாவிற்கெதிராகப் போரிட்டார். ஆனால் கிருஷ்ணா கீர்த்திவர்மனைத் தோற்கடித்து விரட்டினார். கி. பி 760-ல் சாளுக்கிய ஆட்சிப் பகுதிகளனைத்தும் இராஷ்டிரகூட அரசரின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. கிருஷ்ணா மைசூரில் ஆண்டுவந்த கங்கர்களையும் தோற்கடித்தார். கிருஷ்ணா தனது மகன் கோவிந்தாவை வேங்கியில் ஆண்டுவந்த சாளுக்கிய அரசருக் கெதிராகப் போரிடும்படி பணித்தார். கோவிந்தாவும் தான் மேற்கொண்ட போரில் வெற்றியே பெற்றார். கிருஷ்ணா, ராகப்பா (Rahappa) என்ற பெயருடைய மற்றொரு அரசரையும் தோற்கடித்துள்ளார். அதன்பின் தென் கொங்கணத்தைக் கைப்பற்றினார். மத்திய பிரதேச மாநிலத்தின் பெரும்பகுதி கிருஷ்ணாவின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

கிருஷ்ணா போர்புரிவதில் மட்டுமின்றி கட்டிடங்களைக் கட்டு வதிலும் பேரார்வம் கொண்டிருந்தார். சிவனுக்கு எல்லோரா (Ellora) வில் ஓர் அழகிய கோயிலைக் கட்டியுள்ளார். இக்கோயில் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. V. A. ஸ்மித் இக்கோயிலின் அமைப்புக்குறித்து பெரிதும் புகழ்ந்துள்ளார். இக்கோயில் கட்டிடக் கலையின் சிறப்பிற்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகின்றது. சுபதுங்கா, ஆகாலவர்ஷா போன்ற சிறப்புப் பட்டங்களை கிருஷ்ணா சூட்டிக்கொண்டார்.

## இரண்டாம் கோவிந்தா : (கி. பி. 773—780) :

கிருஷ்ணாவிற்குப்பின் அவரது மூத்த மகன் கோவிந்தா அரசுரிமையையேற்றார். இவர் பிரபூதவர்ஷா விக்ரமவலோகா (Prabhuta varsha Vikramavaloka) என்ற சிறப்புப் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். இவர் இளவரசராயிருந்த போதே வேங்கியி லாண்ட சாளுக்கிய அரசரைத் தோற்கடித்தார். ஆனால் இவர் அரசராய் பதவியேற்ற பின் சிற்றின்பத்தில் மூழ்கலானார். ஆட்சிப் பொறுப்புக்களனைத்தையும் இவரது இளைய சகோதரர் முதலாம்

துருவா கவனித்து வந்தார். நிர்வாகப் பொறுப்புக்களனைத்தையும் துருவாவிடம் விட்டுவிட்டால் ஆட்சியதிகாரத்தை அவர் கைப்பற்றி விடுவார் என்று கோவிந்தா அஞ்சத்துவங்கினார். அதனால் சில ஆண்டுகளுக்குப்பின் நிர்வாகப் பொறுப்புக்களனைத்தையும் தாமே கவனிக்கத் துவங்கினார். இதனால் வெறுப்புற்ற துருவா கோவிந்தா விற்கெதிராகப்போர் தொடுக்க ஆயத்தமானார். துருவா கோவிந்தா வைப் போரில் தோற்கடித்து, அதிகாரத்தைத் தாமே கைப்பற்றிக் கொண்டார்.

## முதலாம் துருவா (கி.பி. 770-793):

துருவா ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின் நிர்வாக முறை களில் சீர்திருத்தத்தைப் புகுத்தினார். பின்னர் நிருபாமகலிவல்லபா தாராவர்ஷா, ஸ்ரீவல்லபா போன்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக் கொண்டார். துருவா தனது சகோதரர் கோவிந்தாவிற்கு ஆதர வளித்தவர்களைத் தண்டிக்கத் துவங்கினார். கங்ககுல அரசர் முத்தரஸா (Mutharase) என்பவரைத் தோற்கடித்து அவரது மகன் சிவமாராவை சிறையிலடைத்தார். கங்காவதி (Gangavadi) முழுவதையும் துருவா தனது ஆட்சிப் பகுதியுடன் சேர்த்துக் கொண்டார். துருவா பல்லவ மன்னர் தந்திவர்மனுக்கெதிராகப் போர் தொடுத்தார். தந்திவர்மன் யானைகளை வெகுமதியாக துருவாவிற்களித்து அவருடன் சமாதானம் செய்து கொண்டார். வேங்கி நாட்டரசரும் முற்றிலுமாக அடக்கப்பட்டார். இவ்வெற்றி களினால் துருவாவின் புகழ் தக்காணத்தில் ஓங்கிற்று.

துருவா பேராசை மிகுந்தவர். அதனால் வட இந்தியாவையும் வெல்ல வேண்டுமென்று விரும்பினார். துருவா உஜ்ஜய்னியிலாண்ட பிரதிகாரா அரசர் வத்ஸராஜாவைத் தோற்கடித்து இராஜபுதனத் திற்கு விரட்டினார். துருவா கேஞ்சட்டித் தோவாப் (Gangeti Daob) பகுதியிலாண்ட இந்திராயுதா (Indrayudha) விற்கெதிராகப் போராடி அவரைத் தோற்கடித்தார். இவ்வெற்றியைக் குறிக்கும் வகையில் கங்கை—யமுனை சின்னங்களை தனது அரச சின்னங் களுடன் சேர்த்துக்கொண்டார். துருவா பால (Pala) வமிசத்தைச் சேர்ந்த தர்ம பாலாவையும் தோற்கடித்தார். தர்ம பாலா போரில் தோற்கடிக்கப்பட்டதால் தனது வெண்ணிற அரச குடை யையும் போர்க்களத்தில் விட்டு ஓட நேர்ந்தது. துருவா, கங்கை, யமுனை நதிக்கரைகளில் சில வாரங்கள் வரை தங்கியிருந்தார். துருவாவால் கன்னோசியைக் கைப்பற்ற இயலவில்லை. வட இந்தியாவில் பல இடங்களைக் கைப்பற்றியபின் பெரும் கொள்ளைப் பொருட்களுடன் கி. பி. 790-இல் தன் தலைநகருக்குத் திரும்பினார்.

துருவாவின் ஆட்சிக்காலத்தில் இராஷ்டிரகூடர்களின் பெருமை மிகவும் உச்சக்கட்டத்தை எய்தியிருந்ததாக டாக்டர் அல்டிகர் குறிப்பிட்டுள்ளார். கங்குல இளவரசர் இராஷ்டிரகூட அரசரின் சிறையிலடைப்பட்டிருந்தார். பல்லவமன்னரும் துருவாவுடன் சமாதானம் செய்துகொண்டார். வத்ஸராஜா, தர்மபாலா போன்றோரும் தோற்கடிக்கப்பட்டனர். அதனால் இராஷ்டிரகூட அரசரை வெல்வதற்கேற்ற வலிமை பொருந்திய அரசர் அப்பொழுது ஒருவருமில்லை.

## மூன்றாம் கோவிந்தா (கி. பி. 793-814)

முதலாம் துருவாவிற்குப் பின் 3-ஆம் கோவிந்தா கி.பி.793-இல் அரசப்பதவியேற்றார். இவர் பல இடர்ப்பாடுகளை எதிர்த்து சமாளிக்க நேர்ந்தது. 3-ஆம் கோவிந்தாவின் மூத்த சகோதரரான ஸ்டம்பா கங்காவதியின் கவர்னராய் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர் கோவிந்தா அரசுரிமையேற்றதைக் கடுமையாக எதிர்த்தார். ஸ்டம்பாவிற்கு சில குறுநில மன்னர்கள் உதவியளித்தனர். இருப்பினும் கோவிந்தா ஸ்டம்பாவின் கீழ் தன்னை எதிர்த்த 12 சிற்றரசர்களையும் தோற்கடித்தார். ஸ்டம்பா தனக்கெதிராகப் போராடியபோதும் கோவிந்தா அவரை துன்புறுத்தவில்லை. கோவிந்தா தனது மூத்த சகோதரர் ஸ்டம்பாவை மன்னித்து அவரை மறுபடியும் கங்காவதியின் கவர்னராய் நியமித்தார். ஸ்டம்பா அதன் பின்னர் கோவிந்தாவிற்கெதிராக எவ்வித கிளர்ச்சியிலும் ஈடுபடவில்லை.

3-ஆம் கோவிந்தா அரசுரிமையை யேற்றபின் இராஷ்டிரகூடர்களின் சிறையிலடைபட்டுக்கிடந்த கங்ககுல இளவரசர் சிவமாராவை விடுவித்தார். சிவமாராவை விடுவித்தால், அவர் தனக்கு ஆதரவாளராயிருப்பார் என்ற நோக்கத்தினால்தான் கோவிந்தா சிவமாராவை விடுதலை செய்தார். ஆனால் சிவமாரா கோவிந்தாவிற்கெதிராக ஸ்டம்பாவுடன் கூட்டு சேர்ந்துகொண்டார். அதனால் வெறுப்புற்ற கோவிந்தா சிவமாராவைத் தோற்கடித்து மீண்டும் சிறையிலடைத்தார். பல்லவ மன்னர் தந்திகா என்பவரையும் கோவிந்தா தோற்கடித்தார். வேங்கி நாட்டரசர் 4-ஆம் விஷ்ணுவர்த்தனர் 3-ஆம் கோவிந்தாவின் தாய்வழி தாத்தாவாவார். (Maternal grandfather) அதனால் அவர் கோவிந்தாவை எதிர்க்கவில்லை. இதனால் கோவிந்தாவால் எதிர்ப்புக்கள் எதுவுமின்றி தக்காணத்தையாள முடிந்தது.

கோவிந்தா பேராசைமிக்க அரசர். இவர் வடஇந்தியாவின்மீது படையெடுத்து சில இடங்களைக் கைப்பற்ற விரும்பினார். கன்னோசியைக் கைப்பற்றும் பொருட்டு கோவிந்தா பெரும்

படையுடன் போபால், ஜான்ஸி வழியாக சென்றார். கோவிந்தா பிரதிகார அரசர் 2-ஆம் நாகபட்டா என்பவரை பண்டேல்கன்ட் என்னுமிடத்தில் தோற்கடித்தார். கன்னோசியின் அரசர் சக்ராயுதா கோவிந்தாவிடம் நிபந்தனை ஏதுமின்றி சரணடைந்தார். வங்காளத்தையாண்ட தர்மபாலரும் கோவிந்தாவிடம் சரணடைந்தார். கோவிந்தா வேறுசில வட இந்திய அரசர்களையும் தோற்கடித்தார். ஆனால் அவ்வரசர்களின் ஆட்சிப் பகுதிகளை பின்னர் அவ்வரசர்களிடமே திருப்பிக்கொடுத்து விட்டார். கோவிந்தா தனது படைகளுடன் இமயமலை வரையில் சென்றார். பல அரசர்களைத் தோற்கடித்தபின் தனது தலை நகருக்குத் திரும்பினார். கோவிந்தா, இவரது வடஇந்திய படையெடுப்பு கி. பி. 800-இல் மேற்கொள்ளப்பட்டதென்று சிலரும், கி. பி. 806-இல் மேற்கொள்ளப்பட்டதென்று சிலரும் குறிப்பிட்டுள்ளனர். வேங்கியிலாண்டு வந்த 4-ஆம் விஷ்ணு வர்த்தனர் கி. பி. 799-இல் உயிர்நீத்தபின் அவரது மகன் 2-ஆம் விஜயாதித்தர் அரசப்பதவியேற்றார். போதிய அரசியலனுபவமில்லாத இவ்வரசர் கோவிந்தாவை எதிர்க்கத் தலைப்பட்டார். அதனால் கோவிந்தா விஜயாதித்யரைத் தோற்கடித்து அவரைப் பதவியினின்றும் அகற்றினார். விஜயாதித்யரின் இளைய சகோதரர் வேங்கியின் அரசராய் அமர்த்தப்பட்டார்.

வடஇந்திய படையெடுப்பின் பொருட்டு கோவிந்தா வட இந்தியாவிற்குச் சென்றிருந்தபோது தலைநகரில் குழப்பம் ஏற்பட்டது. இதை வாய்ப்பாகக் கொண்டு கங்க, கேரள, பாண்டிய பல்லவ அரசர்கள் கோவிந்தாவைத் தோற்கடிக்கும் பொருட்டு கூட்டிணைவு ஒன்றினை ஏற்படுத்தியிருந்தனர். ஆனால் கோவிந்தா தலைநகருக்குத்திரும்பியபின் அவர்களனைவரையும் கி.பி. 802-இல் தோற்கடித்தார். கோவிந்தாவின் வீரச்செயலைக்கண்டு இலங்கை மன்னரும் அச்சமடைந்தார். இலங்கைஅரசர், தன்னுடை சிலையையும், தன்னுடைய அமைச்சரின் சிலையையும் கோவிந்தாவிற்கு அனுப்பி அவருடன் சமாதானம் செய்து கொண்டார். இச்சிலைகளிலொன்றை கோவிந்தா காஞ்சியிலுள்ள சிவன் கோயிலில் வைத்தார். கோவிந்தா இராஷ்டிரகூட அரசர்களில் மிகவும் சிறப்புமிக்கவர் என்று டாக்டர் அல்டிகர் குறிப்பிட்டுள்ளார்.

## அமோகவர்ஷா அல்லது சர்வா (கி. பி. 814—878)
## (Amoghavarsha or Sarva) :

கோவிந்தாவிற்குப் பின் அவரது மகன் அமோகர்வர்ஷா அரசப் பதவியேற்றார். இவர் நிருபதுங்கா, மகாராஜஷந்தா, வீரநாராயணா, அதிசயதாவலா போன்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக்கொண்டார். அமோகவர்ஷா பதவியேற்றபோது 14 வயதே

நிரம்பப்பெற்றிருந்தார். நிர்வாகப் பொறுப்புக்களை கர்க்கா கவனித்து வந்தார். இருப்பினும் நாட்டில் குழப்பம் நிலவியதால் சிற்றரசர்கள் கப்பம் செலுத்த மறுத்தனர். கங்காவதியின் சிற்றரசர் சுதந்திரமாக ஆளத்தொடங்கினார். முன்னர் கோவிந்தாவால் தோற்கடிக்கப்பட்ட வேங்கியின் அரசர் 2-ஆம் விஜயாதித்யா அமோகவர்ஷாவிற்கெதிராகப் போர் தொடுத்தார். இதனால் நாட்டில் பெருங்குழப்பம் நிலவியது. அமோகவர்ஷாவும் பதவியை யிழந்தார். இருப்பினும் கி. பி. 821 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு முன்னதாகவே அமோகவர்ஷா தானிழந்த அரசுரிமையை மீண்டும் கைப்பற்றினார். நாட்டில் அமைதியை ஏற்படுத்தியபின் அமோகவர்ஷா கி. பி 830 இல் விஜயாதித்யாவிற் கெதிராகப் போரிட்டு அவரைத் தோற்கடித்தார். இவ்வெற்றிக்குப் பின் இராஷ்டிரகூடர்களின் சேனை சுமார் 12 ஆண்டுகள்வரை வேங்கியிலேயே முகாமிட்டிருந்தது. ஆனால் கி. பி. 845-இல் விஜயாதித்யரின் படைத்தளபதி இராஷ்டிரகூடர்களின் சேனையை வெளியேற்றி வேங்கியை விடுவித்தார். அமோகவர்ஷா பதவியேற்ற நாள் முதல் சுமார் 20 ஆண்டுகள் வரை இராஷ்டிரகூடர்களுக்கும் கங்கர்களுக்கும் தொடர்ந்து பல போர்கள் நடைபெற்றன. இறுதியில் கங்கர்களே வெற்றி பெற்றனர். அமோகவர்ஷா தினது மகளில் ஒருத்தியை கங்கர்குல இளவரசருக்குத் திருமணம் செய்வித்து கங்கர்களுடன் சமாதானம் செய்து கொண்டார்.

அங்கா, வங்கம், மகதம் மாளவம் ஆகிய நாட்டரசர்கள் அமோகவர்ஷாவிற்குக் கப்பம் செலுத்தியதாக சிரூர் (Sirur) கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது. இருப்பினும் இச்செய்தி தற்புகழ்ச்சி யாக இருக்கக்கூடுமென்று கருதப்படுகிறது. ஏனென்றால் இவ்வெற்றிகளுக்குப் போதிய ஆதாரங்களில்லை. அமோகவர்ஷா தான் மேற்கொண்ட படையெடுப்புக்களில் போதிய வெற்றிகளைப் பெறவில்லை. இவர் சமயத்துறையிலும், இலக்கியத்துறையிலும் கொண்டிருந்த ஆர்வமே இவர் போர்த்துறையில் போதிய ஆற்றலற்றவராய் விளங்கியதற்குக் காரணமாகும். இவர் சமண மதக்கோட்பாடுகளில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். இருப்பினும் இந்து மதத்தின் வளர்ச்சிக்கும் தொடர்ந்து ஆதரவளித்து வந்தார். இவர் மகாலெக்ஷ்மியை வழிபட்டு வந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

அமோகவர்ஷா இலக்கிய வளர்ச்சியில் பெருங்கவனம் செலுத்த லானார். ஜெய்னசேனா, மகாவீராச்சாரியா, சாஹாதயானா போன்ற எழுத்தாளர்களை ஆதரித்தார். ஜெய்னசேனா ஆதிபுராணா என்ற நூலையும் மகாவீராச்சாரியார் கணித சாரசங்கிரகா என்ற நூலையும் இயற்றினார். அமோகவர்ஷாவும்

கவிராஜமார்க்கா (Kavirajamargh) என்ற நூலை கன்னட மொழியில் எழுதியுள்ளார். அமோகவர்ஷா மான்யகேட்டா அல்லது மால்கெட் என்னுமிடத்தில் தனது தலைநகரை நிறுவினார். அமோகவர்ஷா தனது ஆட்சியின இறுதிக் காலத்தில் சமயத் துறையில் மிகுந்த கவனம் செலுத்தலானார். அரண்மனையைவிட்டு வெளியே சென்று பல நாட்கள்வரை தவத்தில் ஈடுபட்டார். அக் காலங்களில் ஆட்சிப் பொறுப்புகளை இளவரசரும் அமைச்சர்களும் கவனித்து வந்தனர். அமோகவர்ஷா பொதுமக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். பொதுமக்களிடையே பரவிக் கொண் டிருந்த கொள்ளை நோயைத் தடுக்கும் பொருட்டு தனது கைவிரல் ஒன்றையும் ஒரு தெய்வத்துக்குக் காணிக்கையாக ஈந்தார் என்று கூறப்பட்டுள்ளது.

## இரண்டாம் கிருஷ்ணா (கி. பி. 878—914)

அமோகவர்ஷாவுக்கு பின் அவரது மகன் 2-ஆம் கிருஷ்ணா அரசப் பதவியேற்றார். இவர் சுமார் 36 ஆண்டுகள் வரை ஆட்சி புரிந்தார். இவர் ஆகாலவர்ஷா, சுபதுங்கா போன்ற சிறப்புப்பட்டங் களைச் சூட்டிக்கொண்டார். இவர் தமது தந்தையைப் போன்றே சமண மதத்தில் ஈடுபாடு கொண்டிருந்தார். இவர் அங்கா, கலிங்கம், மகதம், கூர்ஜரம், லேதா ஆகிய நாட்டரசர்களைத் தோற்கடித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இதனால், கிருஷ்ணா பல ஆண்டுகளைப் போரிலேயே செலவிட்டிருக்க வேண்டுமென்று கருது கின்றார்கள். கிருஷ்ணா பிரதிகாரர்கள், கீழைச் சாளுக்கியர்கள் ஆகியோர்களுக்கெதிராக மேற்கொண்ட போர் மிகவும் முக்கிய மானதொரு போராகும். 2-ஆம் கிருஷ்ணா பிரதிகார அரசர் போஜா (Bhoja) விற்கெதிராகப் போராடியபோது கிருஷ்ணாராஜா என்பவர் 2-ஆம் கிருஷ்ணா என்பவருக்குப் பெரும் உதவியளித்தார்.

அமோகவர்ஷாவின் ஆட்சிக் காலத்தில் வேங்கி நாட்டரசர் 3-ஆம் விஜயாதித்யர் வேங்கி நாட்டை இராஷ்டிரகூடர்களின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்தார். அத்துடன் இராஷ்டிரகூடர் களின் சிற்றரசர்களான கங்கர்களையும், நோளம்பர்களையும் (Nolambas) விஜயாதித்யர் தேற்கடித்தார். கிருஷ்ணா சாளுக்கிய அரசரைத் தோற்கடிக்கும் பொருட்டு தனது படை பலத்தைப் பெருக்கினார். தனது சிற்றரசர்களின் துணையுடன் கிருஷ்ணா கிழக்குச் சாளுக்கிய அரசருக்கெதிராகப் போர் தொடுத்தார். விஜயாதித்யருக்குப்பின் அரச பதவியிலிருந்த பீமாவை 2-ஆம் கிருஷ்ணா தோற்கடித்தார்.

கிருஷ்ணா சோழ அரச குடும்பத்துடன் திருமண உறவினை வைத்துக்கொண்டார். சோழ அரசர் முதலாம் ஆதித்யர் 2-ஆம்

கிருஷ்ணாவின் மகளைத் திருமணம் செய்து கொண்டார். இருப்பினும் தனது பேரனை (மகளின் மகன்) பதவியிலமர்த்தும் பொருட்டு 2-ஆம் கிருஷ்ணா சோழ மண்டலத்திற்கு தனது படைகளை அனுப்பநேர்ந்தது. 2-ஆம் கிருஷ்ணா வல்லபா என்பவரால் தோற்கடிக்கப்பட்டார். கிருஷ்ணா தான் மேற்கொண்ட படையெடுப்புக்கள் சிலவற்றில் தோல்வி கண்டார்.

## மூன்றாம் இந்திரா (கி. பி. 914—922)

2-ஆம் கிருஷ்ணாவிற்குப்பின் அவரது பேரன் 3-ஆம் இந்திரா அரசப் பதவியேற்றார். இவர் நித்யவர்ஷா, ரத்த சுந்தர்பா (Rattakandarpa) கீர்த்தி நாராயணா, ராஜ மார்த்தாண்டா, போன்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக்கொண்டார். இந்திரா பிரதிகார அரசர்களுக்கெதிராகத் தொடர்ந்து போரிட்டார். 3-ஆம் இந்திரா தனது படைகளுடன் புறப்பட்டுச் சென்று கன்னோசியைக் கைப்பற்றினார். கன்னோசியைக் கைப்பற்றியது இராஷ்டிரகூட அரசரின் பெரும் சாதனையாகக் கருதப்படுகிறது. கன்னோசியின் அரசர் மகிபாலர் நாட்டைவிட்டு வெளியேறினார். வேங்கியுடன் நடத்திய போரில் இரு தரப்பினருக்குமே போதிய வெற்றிகள் கிடைக்கவில்லை.

3-ஆம் இந்திராவுக்குப் பின்னர் அவரது மகன் 2-ஆம் அமோக வர்ஷா அரசப்பதவியேற்றார். ஆனால் அமோகவர்ஷாவின் இளைய சகோதரர் 4-ஆம் கோவிந்தா அமோகவர்ஷாவைக் கொன்றுவிட்டு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். கோவிந்தா அரசுரிமையை யேற்றபோது 23-வயது நிரம்பப் பெற்றிருந்தார். இவர் சிற்றின்ப வாழ்க்கையில் ஈடுபடலானார். பொதுமக்கள் இவரை ஓர் கொடுங் கோலராகக் கருதினர். இவரை கோவிந்தாவின் சிறிய தந்தை 3-ஆம் அமோகவர்ஷா பதவியிலிருந்து அகற்றி ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டார். அமோகவர்ஷா கி. பி. 936 முதல் 939-வரை ஆட்சி புரிந்தார். ஆட்சிப் பொறுப்புகளை இவரது மகன் 3-ஆம் கிருஷ்ணர் கவனித்து வந்தார். அமோகவர்ஷா நேர்மையாக ஆட்சிபுரிந்தார். கங்காவதி அரசருக்கெதிராகப் போரிட்டு அவரைப் பதவியின்றும் அகற்றினார். அதன் பின்னர் பண்டேல்கண்டின் மீது படையெடுத்து கலஞ்சார் (Kalanjar), சித்ரகூடா (Chitrakuta) ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றினார்.

## மூன்றாம் கிருஷ்ணா (கி.பி. 940—968)

கிருஷ்ணா அரசப் பதவியேற்றபின் தனது மைத்துனர் பூட்டுகா (Bhutuga) வின் துணையுடன் சோழமண்டலத்தின்மீது போர் தொடுத்தார். முக்கிய நகரங்களாகிய தஞ்சை, காஞ்சி போன்ற

வைகள் கி. பி. 943-இல் கைப்பற்றப்பட்டது. சோழ அரசர் இராஷ்டிரகூட அரசரை ஒரு சில இடங்களினின்றும் பின்வாங்கச் செய்தார். இருப்பினும் தொண்டைமண்டலத்தினின்றும் (ஆர்க்காடு, செங்கல்பட்டு, வெல்லூர் மாவட்டங்கள்) இராஷ்டிர கூடர்களை சோழ அரசால் வெளியேற்ற இயலவில்லை. கி. பி 943 இல் தக்கோலம் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் சோழ மன்னரின் படைகள் தோல்வியுற்றன. 3-ஆம் கிருஷ்ணா தனது படைகளுடன் தடையெதுமின்றி ராமேஸ்வரம் வரையில் சென்றார். பின்னர் அங்கு வெற்றித் தூண் ஒன்று நிறுவினார். ராமேஸ்வரத்திற்கருகில் கிருஷ்ணேஸ்வரா, கந்த மார்த்தாண்டாதித்யா (Gandamartandaditya) ஆகிய கோயில்களைக் கட்டியுள்ளார்.

கி. பி. 963-இல் கிருஷ்ணா வட இந்தியாவின் மீதும் படை யெடுத்தார். இவரது படைகள் பண்டேல்கன்ட் வரையில் சென்றன. ஆனால் எந்தெந்த இடங்களைக் கைப்பற்றினார் என்பது தெளி வாக அறியப்படவில்லை. கிருஷ்ணா மாளவ நாட்டின்மீது படை யெடுத்து உஜ்ஜய்னியை கைப்பற்றினார். வேங்கியில் ஆண்டுவந்த மன்னரும் கிருஷ்ணாவின் சொற்படியே நடந்ததால் கிருஷ்ணாவால் வேங்கி நாட்டையும் கட்டுப்படுத்த முடிந்தது. இராஷ்டிரகூட குலத்தைச் சேர்ந்த சிறப்புமிக்க அரசர்களில் 3-ஆம் கிருஷ்ணாவும் ஒருவர் என்று டாக்டர் அல்டிகர் புகழ்ந்துள்ளார். இவர் வட இந்தியாவில் பல வெற்றிகளைப் பெறவில்லை. எனினும் தக்காணம் முழுவதையும் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தார்.

## கொட்டிகா (Khottiga) (கி. பி. 968—972) :

3-ஆம் கிருஷ்ணாவுக்குப் பின்னர் அவரது இளைய சகோதரர் கொட்டிகா கி. பி 968 இல் அரசப் பதவியேற்றார். இவர் வயதில் முதிர்ந்தவராயிருந்த காரணத்தால் போர் புரிவதில் போதிய விருப்பம் கொள்ளவில்லை. பரமாரா மன்னர் சீயகாவின் (Siyka) படையெடுப்பினை இவரால் முறியடிக்க இயலவில்லை. சீயகா இராஷ்டிரகூடர்களின் தலைநகரான மால்கெட்டைக் கைப்பற்றி (கி. பி. 972) அதனை சூறையாடினார். இத்தோல்வியினால் மன முடைந்து, கி. பி 972 செப்டம்பரில் கொட்டிகா உயிர் நீத்தார்.

## இரண்டாம் கர்க்கா (Karka II) :

கொட்டிகாவிற்குப்பின் 2-ஆம் கர்க்கா அரசப் பதவியேற்றார். இவர் போதிய நிர்வாகத் திறமையற்றவராயிருந்த காரணத்தால் நாட்டில் பெருங்குழப்பம் நிலவியது. இதனால், கர்க்கா பதவியேற்ற 18-மாதங்களுக்குள் பதவியைத் துறக்க நேரிட்டது. 2-ஆம்

கர்க்காவின் கீழ் சிற்றரசராய் ஆண்டு வந்த 2-ஆம் தைலா (Taila II) என்பவர் கர்க்காவிற்கெதிராகக் கிளர்ச்சியிலீடுபட்டு கி. பி 973-இல் அரசுரிமையைக் கைப்பற்றிக் கொண்டார். தோற்றுப்போன 2-ஆம் கர்க்கா உயிர் பிழைத்தால் போதுமெனக் கருதி ஓட்டமெடுத்தார். கர்க்கா தான் இழந்த ஆட்சியுரிமையை மீண்டும் பெறும் பொருட்டு சில முயற்சிகளை மேற்கொண்டார். இருப்பினும் அம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. கி. பி. 975-இல் தைலா தக்காணத்தின் பேரரசராய் விளங்கினார். 2-ஆம் கர்க்காவின் மறைவிற்குப் பின் சுமார் 225 ஆண்டுகளாக ஆட்சி புரிந்துவந்த இராஷ்டிரகூட வமிசம் அழிவுற்றது.

## இராஷ்டிரகூடர்களின் ஆட்சிமுறை :

## அரசர் (King) :

அரசரே எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்தார். இராஷ்டிர கூட மன்னர்கள் மகாராஜாதி ராஜா, பரம பட்டாரகா, தாரா வர்ஷா போன்ற சிறப்புப் பட்டங்களைச் சூட்டிக்கொண்டனர். அமைச்சரவைக் கூட்டங்களில் மன்னர் தவறாமல் கலந்து கொள்வார். அரண்மனை மிகவும் அழகுடன் அலங்கரிக்கப் பட்டிருந்தது. அயல் நாட்டுத் தூதுவர்கள். குறுநில மன்னர்கள் போன்றோர் அரண்மனை அதிகாரிகளின் அனுமதியைப்பெற்ற பின்னரே அரண்மனைக்குள் செல்ல இயலும். அலங்கரிக்கப்பெற்ற அரியாசனத்தில் அமர்ந்திருக்கும் மன்னர் விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களை அணிந்திருப்பார். மெய்க்காப்பாளர்கள் மன்னரைச் சூழ்ந்திருப்பர். நாட்டிய மாதர்கள் நாட்டியமாடுவர். அரசவைக் கூட்டங்களில் குறுநில மன்னர்கள், அயல்நாட்டுத் தூதுவர்கள், உயர் அதிகாரிகள், கவிஞர்கள், சோதிடர்கள் போன்றோர் கலந்து கொள்வர்.

மன்னர் பதவி பரம்பரையானது. மன்னரின் மூத்த மகனே மன்னரின் மறைவுக்குப்பின் அரசுரிமையையேற்பார். அரசர் தனது மூத்த மகனைக் காட்டிலும் மற்றொரு மகன் திறமையுடையவனா யிருந்தால் அவனை பட்டத்து இளவரசராய் நியமிப்பதுண்டு. 3—ஆம் கோவிந்தா இவ்விதம் அரசுரிமையைக் பெற்றவராவார். இளவரசர் அரசியல் நிர்வாகங்களில் அரசருக்கு உதவியாயிருப்பார். அத்துடன் போர்க்களத்திற்கும் தனது தந்தையுடன் உடன் செல்வார். அரசரின் மற்ற புதல்வர்கள் மாகாண கவர்னர்களாய் நியமிக்கப்படுவர்.

அமைச்சர்கள் :

அமைச்சர்களின் ஒத்துழைப்புடன் அரசர் நிர்வாகத்தை நடத்தி வருவார். முதலமைச்சர், வெளி உறவு அமைச்சர், வருவாய்த்துறை அமைச்சர், குலகுரு, சேனைத்தளபதி, தலைமை நீதிபதி போன்றோர் அரசவையில் இடம் பெற்றிருந்தனர். இராணுவ அதிகாரிகளே பெரும்பாலும் அமைச்சர்களாய் நியமிக்கப்பட்டனர். அரசருக்கும் அமைச்சர்களுக்குமிடையே நெருங்கிய நட்புறவு காணப்பட்டது. மத்திய அரசு அதிகாரிகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அங்கு நிர்வாகம் ஒழுங்காக நடைபெறுகின்றதா என்பதைக் கண்காணிப்பர். இராஷ்டிரகூட பேரரசின் ஒரு பகுதி இராஷ்டிரகூட அரசரின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வந்தது. மற்றொரு பகுதி குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. குறுநில மன்னர்களுக்குப் பல அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன. குறுநில மன்னர்கள் அரசருக்கு ஒழுங்காக கப்பம் செலுத்தி வந்ததுடன் போர்க்காலங்களில் அரசருக்குப் போர் வீரர்களையும், படைக்கருவிகளையும் கொடுத்து உதவி செய்தனர். சில சமயங்களில் குறுநில மன்னர்கள் போர்க்களத்திற்கும் அரசருடன் உடன் செல்லுதல் வேண்டும்.

அரசரால் நேரடியாக நிர்வகிக்கப்பெற்ற பகுதிகள் ராஷ்ட்ராஸ், விஷயாஸ் (Vishayas) போன்று பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு விஷயாவிலும் 1,000 முதல் 4,000 கிராமங்கள் வரையிலிருந்தன. ஒவ்வொரு விஷயாவும் பல புக்திகளா (Bhukti) பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு புக்தியிலும் 50 முதல் 70 கிராமங்கள் வரையிலிருந்தன. ராஷ்ட்ரா என்ற ஆட்சிப்பகுதியின் தலைவர் ராஷ்டிரபதி என்றழைக்கப்பட்டார். இவர் சிவில், இராணுவ பொறுப்புக்களைக் கவனித்து வருவார். இவர் குறுநில மன்னர்கள், அரசாங்க அதிகாரிகள் போன்றோரின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து வருவார். குறுநில மன்னர்கள் கிளர்ச்சியிலீபட திட்டமிட்டிருந்தால், அதனை உடனடியாக அரசரிடம் தெரிவிப்பார். ராஷ்டிரா ஆட்சிப் பகுதியில் வாழும் மக்களிடம் நிலவரி வசூலித்துக் கொள்வதற்கு இவருக்கு அதிகாரமுண்டு. பிராமணர்கள், கோயில்கள் ஆகியவற்றிற்கு மானியமாகக் கொடுக்கப்பட்ட நிலங்களின் விவரப்பட்டியலை ராஷ்டிரபதி வைத்திருப்பார்.

விஷயா, போகா (Bhoga) ஆகிய ஆட்சிப் பகுதிகளின் தலைவர்கள் முறையே விஷயபதி என்றும், போகபதி என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் ராஷ்டிரபதி பெற்றிருந்த அதிகாரங்களுக்கு இணையான அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். விஷயபதி,

போகபதி போன்ற அதிகாரிகளை அரசரே நியமிப்பார். போரின் போது வியத்தகு சாதனைகளைப் புரிந்தவர்களுக்கு இத்தகைய பதவிகள் அளிக்கப்படும். ஒரு சிலர் பரம்பரையாகவும் இப்பதவி களைப் பெற்றனர். விஷயபதிகளும் போகபதிகளும் நத்கவுண்டர்கள் (Nadgavundas) என்ற அதிகாரிகளின் மூலம் வரிவசூல் செய்தனர். இவர்கள் தங்கள் ஊதியத்திற்கு ஈடாக நிலங்களை மானியமாகப் பெற்றிருந்தனர்.

கிராமத் தலைவர்கள் கிராம நிர்வாகப் பொறுப்புக்களைக் கவனித்து வந்தனர். கிராமத்தலைவர்கள் பதவி பெரும்பாலும் பரம்பரை உரிமைப்படி அளிக்கப்பட்டது. கிராமத்தில் அமைதியை நிலைநாட்டுதல், நிலவரி வசூலித்தல், இராணுவத்திற்கு ஆட்களைச் சேகரித்து அனுப்பிவைத்தல் போன்ற பொறுப்புக்களை கிராமத் தலைவர்கள் கவனித்து வந்தனர். கிராமத் தலைவர் கிராமத்தில் வசூலித்த நிலவரியினைக் கொண்டு போய் அரசாங்க கஜானாவில் செலுத்துவார். ஓர் கிராமத்தில் வாழ்ந்த அனுபவம் வாய்ந்த முதியவர்கள் கிராம மன்றத்தில் இடம் பெற்றிருந்தனர். கிராம மன்றத்தினர் கிராமத் தலைவருக்கு அவ்வப்போது ஆலோசனை வழங்கினர்.

## இராணுவம் :

இராஷ்டிரகூட மன்னர்கள் பல நாடுகளை வெல்ல வேண்டுமென்ற பேராசை உடையவர்களாய் இருந்ததால், படை பலத்தைப் பெருக்க வேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்திருந்தனர். இராஷ்டிரகூட மன்னர்கள் வலிமை பொருந்திய சேனை யொன்றினை வைத்திருந்தனர். இருப்பினும் அப்படையில் எத்தனை போர் வீரர்களிருந்தனர் என்பதை நாம் அறிவதற்கு போதிய சான்று களில்லை. ஆனால் டாக்டர் அல்டிகர் இராஷ்டிரகூட அரசர்களின் படையில் 5 லட்சம் போர்வீரர்களுக்குக் குறைவாக இருந்திருக்க இயலாதென்று குறிப்பிட்டுள்ளார். சேனையின் பெரும்பகுதி தலைநகரிலேயே நிறுத்தப்பட்டிருந்தது. பிராமணர்கள், சமணர்கள் போன்றோரும் இராணுவத்தில் சேர்ந்திருந்தனர். படையெடுப்பின் போது குறுநில மன்னர்கள் அரசருக்குப் படைகளைக் கொடுத்து உதவுவர்.

## அரசு வருவாய் :

பலதரப்பட்ட வரிகளின் மூலம் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைத்து வந்தது. இருப்பினும் உத்தரங்கா (Uddranga) என்றழைக்கப்பட்ட நிலவரியே அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானங்களுள் முக்கியமானதாகும். குறுநில மன்னர்களும் அரசருக்குக் கப்பத்தொகையைச் செலுத்தி வந்தனர். சுரங்கங்கள்,

காடுகள், போன்றவற்றின் வாயிலாகவும் அரசுக்கு வருமானம் கிடைத்து வந்தது. விளைச்சலில் கால்பகுதி (1/4) நிலவரியாக வசூலிக்கப்பட்டது. பஞ்ச காலங்களில் நிலவரி நிலுவைகள் தள்ளுபடி செய்யப்பட்டன. சுங்க வரிகளின் மூலமாகவும் அரசாங்கத்துக்கு வருமானம் கிடைத்து வந்தது.

## சமயமும் கலையும் (Religion and Art) :

இராஷ்டிரகூட அரசர்கள், சிவா, விஷ்ணு போன்ற கடவுள்களை வழிபட்டனர். இக்கடவுள்களின் பெயர்கள் இராஷ்டிரகூட மன்னர்களின் கல்வெட்டுக்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன. விஷ்ணுவின் வாகனமான கருடன் பொறிக்கப்பெற்ற பல இலச்சினைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சிவா யோக நிலையிலுள்ள காட்சியும் பல இலச்சினைகளில் பொறிக்கப்பட்டுள்ளது. இராஷ்டிரகூட மன்னர்கள் வேள்விகள் செய்வதில் விருப்பமுடையவர்கள் தந்தி துர்க்கா ஹிரண்யகார்பா என்ற வேள்வியினை உஜ்ஜயினியில் நடத்தினார். மன்னரின் எடைக்கு எடை தங்கத்தை நிறுத்து தானமாகக் கொடுக்கும் துலாதானம் (Tuladanas) முறையும் வழக்கத்திலிருந்தது.

சிவாவிற்கு எல்லோராவில் கட்டப்பட்ட கோயில் இராஷ்டிரகூடர்களின் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களுள் மிகவும் சிறப்பு மிக்கதாகும். இராஷ்டிரகூடர்கள் கலை வளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள்ளனர். கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் முதலாம் கிருஷ்ணாவின் காலத்தில் எல்லோராவிலுள்ள கைலாசர் கோயில் கட்டப்பட்டது. இக்கோயில் மலையைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ளது. இக்கோயில் பட்டாடக்கல்லிலுள்ள லோகீஸ்வரர் கோயிலை ஒத்துள்ளது. கைலாசர் கோயிலின் நீளம் 276 அடி; அகலம் 154 அடியாகும். இராவணன் கைலாச மலையை அசைத்தல்; சிவா நடனமாடுதல், போன்ற காட்சிகள் சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன. விஷ்ணு இலக்குமி போன்றோரின் சிலைகளும் இக்கோயிலில் உள்ளன. பெர்சி பிரௌன் (Percy Brown) எல்லோராவிலுள்ள கைலாசர் கோயிலைப் பெரிதும் புகழ்ந்து எழுதியுள்ளார். கைலாசர் கோயிலைச் சுற்றியுள்ள சில சிறிய கோயில்கள் பிற்காலத்தில் கட்டப்பட்டவைகளாகும்.

தசாவதார கோயிலும் இராஷ்டிரகூட மன்னர்களால் கட்டப்பெற்ற கோயில்களுள் ஒன்றாகும். இக்கோயில் பெரியதாகவும், அதே சமயத்தில் எளிமையாகவும் உருவாக்கப்பட்டுள்ளது. வைணவ சிவ கடவுள்களின் வரலாற்றைச் சித்தரிக்கும் சிற்பங்கள் கோயிலின் உட்புற சுவர் நெடுகிலும் வைக்கப்பட்டுள்ளன. இக்கோயிலில் உள்ள சிற்பங்களில் ஹிரன்யகாசிபு (Hiranyakasipu)

சிற்பம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். கடவுள் பக்தியில்லா ஒரு மன்னனை ஒரு தேவதை (பாதி மனித உடலும், மற்றொரு பாதி சிங்கத்தின் உடலையும் உடையது) கொல்வதை விளக்கும் சிற்பமே மேற்கூறப்பட்ட ஹிரன்யகாசிபு சிற்பமாகும்.

முதலாம் அமோகவர்ஷா, 4-ஆம் இந்திரா, 2-ஆம் கிருஷ்ணா, 3-ஆம் இந்திரா போன்ற இராஷ்டிரகூட மன்னர்கள் சமண மதத்திற்கு ஆதரவளித்தனர். அதனால் 5 சமணக் கோயில்கள் மேற்கூறப்பட்ட மன்னர்களால் கட்டப்பட்டுள்ளன. அவற்றுள் சோட்டா கைலாச (Chhotakailasa) இந்திர சபா, ஜகந்நாத சபா ஆகியவைகள் முக்கியத்துவம் வாய்ந்த சமண கோயில்களாகும். இச் சமண கோயில்களெல்லாம் பாறைகளைக் குடைந்து உருவாக்கப்பட்டவைகளேயாகும். இக்கோயில்களிலுள்ள தூண்களெல்லாம் மிக அழகிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

எலிபெண்டா (Elephanta) என்னுமிடத்திலுள்ள கோயிலும் இராஷ்டிரகூடர்கள் காலத்தில் கட்டப்பட்டதாகும். இக்கோயில் எல்லோராவிலுள்ள கோயிலைக் காட்டிலும் மிகவும் சிறப்பு மிக்கதாகும். எலிபெண்டாவிலுள்ள நடராஜா, சதாசிவா ஆகிய கடவுள்களின் சிலைகள், எல்லோராவிலுள்ள பைரவர் (Bhairava) சிலையைக் காட்டிலும் மிகவும் சீரிய முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. அர்த்த நாரீஸ்வரர், திருமூர்த்தி போன்ற கடவுள்களின் சிலைகள் மிகவும் அழகாக உருவாக்கப்பெற்று எல்லோராவில் வைக்கப்பெற்றுள்ளன. இராஷ்டிரர்கள் காலத்தில் உருவாக்கப்பெற்ற கோயில்களின் சுவர்களில் ஓவியங்களும் வரையப்பெற்றிருந்தன. ஆனால், கால வெள்ளத்தால் அவ்வோவியங்களில் பெரும்பாலானவை அழிந்து விட்டன.

இராஷ்டிரகூட மன்னர்களின் சாதனைகள் குறித்து பல வரலாற்றாசிரியர்கள் வியந்து பாராட்டியுள்ளனர். கி.பி. 753முதல் 975 வரை தக்காணத்தில் ஆட்சிபுரிந்த இராஷ்டிரகூட அரசவமிசம் பல சிறப்பு மிக்க சாதனைகளைப் புரிந்துள்ளதாக டாக்டர் அல்டிகர் புகழ்ந்துள்ளார். இராஷ்டிரகூட மன்னர்களான துருவா, 3-ஆம் கோவிந்தா, 3-ஆம் இந்திரா போன்றோர் வட இந்தியாவின் மீது படையெடுத்து வெற்றிவாகை சூடினர். 3-ஆம் கிருஷ்ணாவின் ஆட்சிக் காலத்தில் தென்னிந்தியாவின் தென்திசையிலுள்ள ராமேஸ்வரம் வரையிலும் இராஷ்டிரகூடர்களின் செல்வாக்குப் பரவியிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.